மலர் 9 • இதழ் 3 • ஜூலை 2024 • ரூ.20/-

AGARAM FOUNDATION
அறம் செய விரும்பு

# யாதும்

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி



## என்ன சொல்கிறது மாநிலக் கல்விக் கொள்கை?

## நீட் தேர்வை நீக்குவதற்கு மூன்று காரணங்கள்!

## விளைவுகளை அறிந்து செயல்படுகிறோமா?

# மரம் வளர்ப்போம்
# மழை பெறுவோம்



சமுதாய நலன் கருதி வெளியிடுவோர்



**சக்தி®**

**மசாலா**



**சக்திமசாலா பிரைவேட் லிமிடெட்**
6, மாமரத்துப்பாளையம், ஈரோடு - 638 004.
போன் : 0424 - 2533601.
E-mail : headoffice@sakthimasala.co.in
www.sakthimasala.com

• **சக்தி** மசாலா சமையல் பொடி வகைகள் • **சக்தி** ஊறுகாய் வகைகள் • **சக்தி** சன் பிளவர் ஆயில் • **சக்தி** பருப்பு வகைகள் • **சக்தி** பஜ்ஜி போண்டா மாவு • **சக்தி** ராகி மாவு • **சக்தி** கடலை மாவு • **சக்தி** அப்பளம் • நெய்

ENGINEERING | ARCHITECTURE | DENTAL | RESEARCH | ARTS & SCIENCE

# YOUR CAREER BEGINS WITH US






COURSES AVAILABLE

Aeronautical | Automobile | Bioinformatics | Biomedical | Biotechnology | Chemical | Civil | Computer Science and Engineering | Electrical and Electronics | Electronics and Communication | Electronics and Telecommunication | Electronics and Instrumentation | Information Technology | Mechanical | Mechanical and Production | Bachelor of Architecture (B.Arch.) | Bachelor of Dental Surgery (BDS)

100% PLACEMENT OPPORTUNITY

ADMIRABLE INFRASTRUCTURE

WORLD CLASS ACADEMIC AMBIENCE

EMINENT FACULTY

SATHYABAMA UNIVERSITY

(Established under section 3 of the UGC Act, 1956)
Declared as Category " A " University by MHRD, Government of India

facebook.com/SathyabamaUniversityOfficial

www.sathyabamauniversity.ac.in

Jeppiaar Nagar, Rajiv Gandhi Salai, Chennai - 600 119.

Phone : Administrative Office: 044-2450 3150 / 51 / 52 / 53 / 54 / 55 | Entrance Exam Office: 044-24502436 | Fax : 044 - 2450 2344




# கல்வியின் காவலர்களைப் போற்றுவோம்!

**அனைவருக்கும் அன்பு வணக்கம்.**

பொருளாதாரப் பின்புலம் இல்லாத எளிய குடும்பங்களின் பிள்ளைகள், கிராமப்புற மாணவர்கள், உள்ளடங்கிய மலைவாழ்ப் பகுதிகளில் வசிப்போரின் குழந்தைகள் என்று பலருக்கும் நம்பிக்கையாக இருப்பவை அரசுப் பள்ளிகளே! இங்கு கிடைக்கும் கற்றல் முறைகளிலும் கட்டமைப்பிலும் எத்தனையோ பிரச்னைகள் இருந்தாலும், அதையெல்லாம் தாண்டி நாம் அரசுப் பள்ளிகள் மீதே இந்தக் காரணத்துக்காக நம்பிக்கை வைக்க வேண்டியுள்ளது.

இந்த அரசுப் பள்ளிகளில் எத்தனையோ ஆசிரியர்கள் நம் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக அர்ப்பணிப்புடன் உழைக்கிறார்கள். அவர்களை அகரம் பவுண்டேஷனும் 'யாதும்' இதழும் போற்றிப் பாராட்டி வருகின்றன. இவர்களைத் தாண்டிக் கல்வியின் காவலராகச் சமீபத்தில் செய்திகளில் இடம்பெற்ற ஒருவரை மதிப்புடன் நாம் வணங்க வேண்டும்.

தெலங்கானா மாநிலத்தில் அரசுப்பள்ளி ஆசிரியராக இருக்கிறார் 53 வயது சீனிவாஸ். ஹைதராபாத் அருகே இருக்கும் பொனகல் என்ற கிராமத்தில் அரசு ஆரம்பப் பள்ளியில் கடந்த 12 ஆண்டுகளாகப் பணியாற்றி வந்திருக்கிறார் சீனிவாஸ். ஒரே இடத்தில் 12 ஆண்டுகளாக வேலை பார்த்த அவரைப் பக்கத்துக் கிராமத்துக்கு மாற்றியிருக்கிறது அரசு. அங்கிருந்து மூன்று கி.மீ தூரத்தில் இருக்கிறது அந்தப் பள்ளிக்கூடம்.

சீனிவாஸ் சார் மாறுதலாகிப் போகிறார் என்ற தகவல் பள்ளியிலும் ஊரிலும் பரவியதும், கிராமமே கொந்தளித்தது. அவர் போகக்கூடாது என்று ஊர் மக்கள் தடுத்தார்கள். குழந்தைகள் அழுதார்கள். ஆனால், இந்த மாறுதலை மாற்றிவிட்டுப் பழைய பள்ளியிலேயே தொடர்வதற்கு சீனிவாஸ் எடுத்த முயற்சிகள் பலன் தரவில்லை. ஜூலை 1–ம் தேதி புதிய பள்ளிக்குப் போய்விட வேண்டும் என்று அதிகாரிகள் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள்.

சீனிவாஸ் விடைபெற்றபோது 1–ம் வகுப்பு முதல் 5–ம் வகுப்பு வரை உள்ள குழந்தைகள் அத்தனைப் பேரும் "போகாதீங்க சார்" என்று கதறினார்கள். பள்ளியின் கேட்டை மூடி அவரைப் போகவிடாமல் தடுத்தார்கள். அவர் வாகனத்தின் பின்னாலேயே ஓடி

அழுது புரண்டார்கள். ஆசிரியருக்கும் போக மனமில்லை. ஆனால், அரசு உத்தரவை மதிக்க வேண்டுமே! குழந்தைகளைச் சமாதானம் செய்துவிட்டு அரைமனதாக விடைபெற்றார்.

இதுவரைகூட அரிதாகச் சில பள்ளிகளில் நாம் பார்த்த சம்பவங்கள் போல இருக்கும். அதன்பின் நடந்ததுதான் வித்தியாசமானது. 'சீனிவாஸ் சார் இல்லாத பள்ளிக்கு நாங்கள் போக மாட்டோம்' என்று குழந்தைகள் அன்று மாலை வீட்டுக்குப் போய் அடம்பிடித்தன.

அந்தப் பள்ளியில் 250 குழந்தைகள் படித்து வந்தார்கள். அவர்களில் 133 குழந்தைகளின் பெற்றோர்கள், அடுத்தடுத்த நாட்களில் மாற்றுச் சான்றிதழ் வாங்கிக்கொண்டு, தங்கள் குழந்தைகளைக் கூட்டிப் போய் சீனிவாஸ் புதிதாகப் பணியில் சேர்ந்த பள்ளியில் சேர்த்திருக்கிறார்கள். மூன்று கி.மீ தூரம் போக வேண்டும். குழந்தைகளுக்கும் சிரமம், பெற்றோருக்கும் சிரமம். ஆனால், இதையெல்லாம் பொருட்படுத்தாமல் ஓர் ஆசிரியருக்காகத் தாங்கள் படிக்கும் பள்ளியையே மாற்றிக்கொள்ளச் சின்னக் குழந்தைகள் விரும்புகிறார்கள் என்றால், அந்த ஆசிரியரை வணங்கத் தோன்றுகிறது. 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' என்ற மூத்தோர் மொழி நினைவுக்கு வருகிறது.

வெறும் 32 குழந்தைகள் படித்துவந்த பொனகல் அரசு ஆரம்பப்பள்ளியைத் தன் 12 ஆண்டு கால முயற்சியில் 250 பேர் படிக்கும் பள்ளியாக மாற்றியவர் சீனிவாஸ். ஒரு குழந்தை ஒரே ஒருநாள் பள்ளிக்கு வராவிட்டால்கூடப் பதறிப் போய் விசாரிப்பாராம். பாடங்களைப் புரிந்துகொள்ள முடியாத குழந்தைகளுக்குச் சிறப்பு வகுப்புகள் எடுப்பாராம். குழந்தைகளிடம் அவர் பொழிந்த அன்புதான் அவரைத் தனித்துக் காட்டியிருக்கிறது.

"ஓர் ஆசிரியருக்காகத் தாங்கள் படிக்கும் பள்ளியிலிருந்தே மாறுதல் வாங்கிக்கொண்டு பக்கத்துக் கிராமத்தில் போய்க் குழந்தைகள் படிப்பது என்பது இதுவரை கேள்விப்படாத விஷயம். அவரைப் பிரிந்திருக்க முடியாத அளவுக்குக் குழந்தைகள் அவருடன் உணர்வுரீதியாகப் பின்னிப் பிணைந்திருக்கின்றனர்" என்று நெகிழ்கிறார்கள் அதிகாரிகள்.

"குழந்தைகள் என்மீது செலுத்தும் அன்பை மதிக்கிறேன். என்னதான் குழந்தைகள் ஆர்வத்தில் கேட்டாலும், அவர்கள் கேட்டதற்காக நான் பணிபுரியும் இந்தப் பள்ளிக்குத் தங்கள் குழந்தைகளைக் கூட்டிவந்து சேர்த்த பெற்றோரின் நம்பிக்கையை நான் காப்பாற்ற வேண்டும். அந்தக் குழந்தைகளின் எதிர்காலத்துக்கு நான் பொறுப்பு" என்று கண்கள் கலங்கச் சொல்லியிருக்கிறார் சீனிவாஸ்.

இவர் போன்றவர்களே அரசுப் பள்ளிகளில் நம் குழந்தைகளுக்கு ஆதரவாக இருக்கும் கல்விக் காவலர்கள். இவர்களைப் போற்றுவோம்.

அன்புடன்,
**சூர்யா**
நிறுவனர் - அகரம் பவுண்டேஷன்


**யாதும்**
நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

தமிழ் மாத இதழ்
மலர் 9 • இதழ் 3
ஜூலை 2024

கௌரவ ஆசிரியர்
**திரு.சூர்யா**

பதிப்பாளர் - ஆசிரியர்
**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்
**வள்ளி**

வடிவமைப்பு
**கே.உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
தொலைபேசி : 9952920801



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by T.J.Gnanavel,
on behalf of
Tharu Media (P) Ltd.,
10/55,Raju Street,
West Mambalam,
Chennai - 600 033.
email:
contactyadhum@gmail.com



# கையெழுத்து தரும் நம்பிக்கை!

குழந்தைகள்... 6

வீதியிலும் வகுப்பறையிலும்

ச.முத்துக்குமாரி

கிராமம்தோறும் நூலகம் அமைத்ததும், நன்றாக வாசிக்கும் மாணவர்கள் போட்டி போட்டுக்கொண்டு வாசித்தனர். போனில் கதைகள் தொடர்பாகச் சந்தேகங்கள் கேட்டனர். வாசித்த கதைகளை ஆர்வமாகப் பகிர்ந்துகொண்டனர். அவர்களின் வாழ்வில் புத்தகங்கள் மெல்ல ஊடுருவ ஆரம்பித்தன. மறுபக்கம் வாசிக்கத் தடுமாறிய பெரும்பான்மை மாணவர்கள் வாசிப்பதைத் தவிர்த்தனர். சமயங்களில் எனக்காக ஒரு சில புத்தகங்கள் வாசிக்கவும் செய்தனர். ஆனால் அதில் உள்ளார்ந்த ஈடுபாடு இல்லை.

நான் சிறுவயதில் ‘சிறுவர் மலர்’ விரும்பிப் படிப்பேன். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் திருவிழா மனநிலையில் இருப்பேன். பள்ளி முடிந்து வந்ததும் ராசாத்தி அக்கா வீட்டுக்கு ஓடுவேன். அங்குதான் சிறுவர் மலர் கிடைக்கும். அன்று வாசித்த கதைகள் எனக்குச் சிறகுகளைத் தந்துகொண்டிருந்தன. அன்று கதைகள் தந்த பரவசத்தை இப்போதும் உணர்கிறேன்.

இந்த மாணவர்களை ஏன் வாசிப்பு அதேபோலப் பரவசப்படுத்தவில்லை? ‘வாசிக்கச் சோம்பேறித்தனமாக இருக்குமா’ என்று யோசித்தேன். இல்லை, வாசிப்பதில் சிரமம் இருக்கிறது. சென்ற முறை வந்தபோது என் மாணவன் சொன்னது நினைவுக்கு வந்தது. ‘வாசிக்க கஷ்டமா இருக்கு. புரியல.’ அதே பதிலைத்தான் இம்முறையும் எதிர்கொண்டேன்.

ஏன் இப்படிச் சொல்கிறார்கள்? அப்போதுதான் குழந்தைகளுக்கான புத்தகங்களை வாசிக்க ஆரம்பித்தேன். இது தனிப்பட்ட முறையில் சிறார் இலக்கியம் குறித்துப் புதுப் பார்வையை எனக்குத் தந்தது. ‘எதை எழுத வேண்டும், எப்படி எழுத வேண்டும்’ என்பதை வாசிப்பில் தடுமாறிய மாணவர்கள் மூலம் அறிந்துகொள்ள ஆரம்பித்தேன். பின்னாளில் சிறார் கதைகள் எழுத இந்த அனுபவம் பயன்படும் எனக் கனவிலும் நினைக்கவில்லை.

புதியதைக் கற்றுக் கொடுக்கச் சென்றதாக என் ஆசிரிய மனம் நம்பியது. ஆனால் ஒவ்வொரு வீதி வகுப்பறை முடிந்து வரும்போதும் நான்தான் புதிய விஷயங்களைக் கற்றவாறு இருந்தேன்.

கொரோனோ வேகமாகப் பரவ ஆரம்பித்தது. புத்தக வாசிப்பு மட்டும் போதவில்லை. வாசிப்பில் தடுமாறும் மாணவர்கள் விடுபட்டு விடக்கூடாது. அவர்களையும் வாசிப்பில் இணைக்க புதிதாக ஏதாவது கற்றுக்கொண்டால் நல்லது என்று நினைத்தேன்.

பெற்றோர்களின் எதிர்பார்ப்புகளையும் திருப்திப்படுத்த வேண்டியிருந்தது. ‘ஏதோ டீச்சர் வராங்க, போறாங்க. எதுவும் சொல்லித் தராங்களா?’ என்ற கேள்வி அவ்வப்போது எழுந்தது. அவர்களைச் சொல்லியும்

குற்றமில்லை. தனியார் பள்ளிகள் இணையவழியில் பாடம் நடத்துவதைப் பார்த்து வந்த பயம்தான். கற்றலில் இருந்து தம் பிள்ளைகள் விடுபட்டு விடுவார்களோ எனும் பயத்தில் நியாயமிருந்தது.

அந்தச் சமயத்தில் முகநூலில் ஆசிரியர் திரு.பூபதி ஆங்கிலத்தில் கையெழுத்துப் பயிற்சி சொல்லித் தருவதை அறிந்தேன். அவரிடம் பேசி, அவர் எப்படிச் சொல்லித் தருகிறார் என்பதை அறிந்தேன். வாட்ஸ்அப் மூலம் குழந்தைகளுக்குக் கற்றுத் தருவதாகவும், தினசரி ஒரு பக்கம் எழுதி மாணவர்கள் குழுவில் பகிர்ந்தால் அதைச் சரி பார்ப்பதாகவும் சொன்னார்.


எனக்கு அங்குதான் பிரச்னை. ஆண்ட்ராய்டு போன் எல்லோரிடமும் இல்லை. அப்படியே இருந்தாலும் இணைய வசதிக்கான வாய்ப்புக் குறைவு. ஊரில் சிலரிடம் மட்டுமே ஆண்ட்ராய்டு போன் இருந்தது.

யாரிடம் இணைய வசதி இருக்கிறதோ, அவர் வீட்டுக்கு மற்ற மாணவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குச் செல்ல வேண்டும். ஒவ்வொரு நாளும் சார் அனுப்பும் ஸ்ட்ரோக்கை பயிற்சி செய்து, எழுதியதைப் புகைப்படம் எடுத்து, குழுவில் பகிர ஏற்பாடு செய்தோம்.

இப்படிச் செய்ததால் வேலை நடந்தது. ஆனால் வேறு ஒருவர் வீட்டுக்குப் போவதும், அங்கே உட்கார்ந்து பயிற்சி செய்வதும் குழந்தைகளுக்குச் சின்னச்சின்னச் சங்கடங்களை உருவாக்கின. ஆனால், தொடர்ந்து தந்த உற்சாகத்தால் இதற்கு மாணவர்கள் பழக ஆரம்பித்தனர்.

பூபதி சார் தினசரி எழுத வேண்டியதைக் குழுவில் பகிர்ந்தார். நான்கு கிராமங்களிலும் நான்கு மாணவர்கள் மூலம் அனைவரையும் குறிப்பிட்ட நேரத்தில் எழுதவைத்துப் பயிற்சி கொடுத்தார்கள். தொடர்ந்து பயிற்சி எடுத்தனர்.

ஒரு மாதப் பயிற்சியில் வித்தியாசம் தெரிய ஆரம்பித்தது. மீண்டும் நான்கு கிராமங்களுக்கும் பயணித்தேன். பல பெற்றோர்கள் முதல்முறையாக என்னிடம் வந்து பேசினர். "கல்லூரிமாணவர்கள்கூட இவ்வளவு அழகாக ஆங்கிலக் கையெழுத்தில் எழுத மாட்டார்கள்"



என்று பெருமையாகச் சொன்னார்கள். தொடக்கத்தில் பங்கேற்காதவர்களுக்குப் பயிற்சி எடுத்த மாணவிகளே சொல்லித் தந்தனர். நான்கு மாதங்கள் தொடர் கையெழுத்துப் பயிற்சி எடுத்தனர். கையெழுத்து அழகாகும்போது குழந்தைகளிடம் புது நம்பிக்கை உருவாகும்.

பள்ளிக்குள் சமூக அறிவியல் ஆசிரியராக இருந்தாலும் என் வகுப்பில் மட்டுமாவது கையெழுத்துப் பயிற்சி தர முயற்சி செய்தேன். ஆர்வம் இருந்து என்ன பயன்? நேரமின்மையால் அதைத் தொடர முடியவில்லை. வீதிக்கும் வகுப்பறைக்கும் இருக்கும் முக்கியமான வித்தியாசம், 'நேரச் சுதந்திரம்'.

இந்த வீதி வகுப்பறைகள் ஒரு பக்கம் நடக்க, இன்னொரு பக்கம் பத்தாம் வகுப்பு மாணவர்கள் ஒருவித மன உளைச்சலில் இருந்தனர். தேர்வு இருக்கிறதா, இல்லையா என்பதும் அறிவிக்கப்படவில்லை. படிக்கச் சொல்லிப் பெற்றோர்கள் தொடர்ந்து நச்சரிக்க ஆரம்பித்தது இன்னும் அவர்களிடம் சஞ்சலத்தைத் தந்தது.

வார இறுதியில் பத்தாம் வகுப்பிற்கு மட்டும் பாடப்பகுதிகள் சார்ந்து கொஞ்சம் படிக்கத் தந்தேன். வீட்டிலேயே சிறு குழுவாகத் தேர்வு எழுதி, அவர்களுக்குள் திருத்திக் கொண்டனர். ஏதோ ஒரு வகையில் அவர்கள் பாடப்புத்தகத்தைக் கையிலெடுத்தது பெற்றோருக்கு ஒருவித ஆசுவாசத்தைத் தந்தது.

பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வு தரும் மன உளைச்சலுக்கு கொரோனோ பரவாயில்லை போல... விடுமுறையிலும் பத்தாம் வகுப்பு மாணவர்களைப் பதற்றத்தில்தான் குடும்பம் வைத்திருந்தது.

வீதி வகுப்புகளில் உற்சாகமாகப் பங்கெடுத்தவர்கள் பெரும்பான்மையாகப் பெண் குழந்தைகளே! ஆண் குழந்தைகள் தடம் மாறப் பல வழிகள் இருந்தன. ஆனால், அவர்களை ஆக்கப்பூர்வமாகப் பயணிக்க வைக்க என்ன வழி உருவாக்கி வைத்திருக்கிறோம் என்ற கேள்வி எழுந்தது. அதற்கு விடை தேட ஆரம்பித்தேன்.

**(தொடர்ந்து பேசுவோம்...)**

கடந்த 2020–ம் ஆண்டு மத்திய அரசு வெளியிட்ட புதிய கல்விக் கொள்கைக்குத் தமிழ்நாட்டில் பெரிய அளவில் எதிர்ப்புகள் எழுந்தன. இது குறிப்பாகக் கிராமப்புற, பின்தங்கிய பகுதி மாணவர்களுக்குப் பெரும் பாதகமாக இருப்பதாகக் கல்வியாளர்கள் குற்றம் சாட்டினர். இந்நிலையில் கடந்த 2021–ம் ஆண்டு தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன், 'மாநிலத்திற்குப் புதிய கல்விக் கொள்கையை உருவாக்க ஒரு குழு அமைக்கப்படும்' என்று அறிவித்தது.

2022–ம் ஆண்டு டெல்லி உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி த.முருகேசன் தலைமையில் இதற்காகக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் கல்வியாளர் பேராசிரியர் எல்.ஜவஹர்நேசன், தேசிய கணிதவியல் ஆய்வு நிறுவனத்தின் ஓய்வு பெற்ற கணினி அறிவியல் பேராசிரியர் இராமானுஜம், மாநிலத் திட்டக்குழு உறுப்பினர்கள் பேராசிரியர் சுல்தான் இஸ்மாயில், பேராசிரியர் இராம சீனுவாசன், யூனிசெஃபின் முன்னாள் சிறப்புக் கல்வி அலுவலர் அருணா ரத்னம், கல்வியாளர் துளசிதாசன், கல்வியாளர் பேராசிரியர் ச.மாடசாமி, அரசுப்பள்ளித் தலைமை ஆசிரியர் இரா.பாலு, அகரம் அறக்கட்டளையின் ஜெயஸ்ரீ தாமோதரன், எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணன், புகழ்பெற்ற செஸ் வீரர் விஸ்வநாதன் ஆனந்த், இசைக் கலைஞர் டி.எம்.கிருஷ்ணா ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். பிறகு இந்தக் குழுவிலிருந்து ஜவஹர் நேசன் விலகினார்.

இந்தக் குழு தனது அறிக்கையைத் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் ஜூலை 1 அன்று வழங்கியது. பள்ளிக்கல்வியில் செய்ய வேண்டிய மாற்றங்கள், பள்ளிக் கட்டமைப்புகளில் தேவைப்படும் மேம்பாடுகள், கற்பிக்கும் மொழி, உயர்கல்வியில் செய்யவேண்டிய மாற்றங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பாக அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவை குறித்து இந்தக் கொள்கையில் பரிந்துரைகள் தரப்பட்டுள்ளன.

'கல்வியைப் பொதுப்பட்டியலில் இருந்து மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவர முயற்சி எடுக்க வேண்டும்' என்று கூறும் இந்தக் குழு, பள்ளிக்கல்வி தொடர்பாக அளித்திருக்கும் சில பரிந்துரைகள்:

- பள்ளிக்கல்வியில் தமிழே முதல் மொழியாக இருப்பது அவசியமானது. ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழே பயிற்றுமொழியாக இருக்க வேண்டும்.
- பள்ளிகளில் சேர்வதற்கு எந்த நுழைவுத் தேர்வையும் நடத்தக்கூடாது. இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை 11–ம் வகுப்பில் செயல்படுத்துவதற்குப் பதிலாக, 9–ம் வகுப்பில் செயல்படுத்தலாம்.
- அரசுப் பள்ளிகளுக்கு அரசு போதிய அளவில் நிதி ஒதுக்காததால்தான் மக்கள் தனியார் பள்ளிகளை நாடிச் செல்கின்றனர். பொதுப் பள்ளிகளின் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும்.
- கல்வி உரிமைச்சட்டத்தின் கீழ் தனியார் பள்ளிகளில் சேர்க்கப்படும் மாணவர்களுக்கு அரசே கட்டணம் செலுத்துவதற்குப் பதிலாக, அரசுப் பள்ளிகளில் கூடுதல் முதலீடுகளைச் செய்ய வேண்டும்.



- அரசு உதவி பெறும் பள்ளிக்கூடங்களை அரசுப் பள்ளிகளுக்கு இணையாகக் கருத வேண்டும். ஆனால், அந்தப் பள்ளிகளில் அதிக அளவில் ஆசிரியர்களைச் சேர்ப்பது, கூடுதல் கட்டணம் வசூலிப்பது போன்ற புகார்கள் குறித்து அறிய சிறப்பு ஆய்வு நடத்த வேண்டும்.
- முறையான கல்வி வழங்கும் பள்ளிக்கூடங்களுக்கு முந்தைய 'விளையாட்டுப் பள்ளிகளில்' (Play Schools) சேர்க்க ஒரே வயது வரம்பை நிர்ணயிக்க வேண்டும். மூன்று வயது நிரம்பிய குழந்தைகளை மட்டுமே சேர்க்க வேண்டும் என்று நிர்ணயிக்கலாம். ஓராண்டின் ஜூலை 31–ம் தேதி 5 வயது நிரம்பிய குழந்தைகளை ஒன்றாம் வகுப்பில் சேர்க்கலாம். ஒன்றாம் வகுப்பே முறையான கல்வியின் ஆரம்பக்கட்டமாகக் கருதப்படும்.
- மனப்பாடம் செய்து தேர்வெழுதும் முறையை நீக்கிவிட்டு, தம் அறிவைப் பயன்படுத்தி யோசித்து தேர்வெழுதும் முறையை ஊக்குவிக்க வேண்டும்.







# என்ன சொல்கிறது மாநிலக் கல்விக் கொள்கை?

- பத்தாம் வகுப்பு வரை தேர்வுகள் பள்ளிக்கூட மட்டத்திலேயே நடத்தப்பட வேண்டும். மையப்படுத்தப்பட்ட பொதுத்தேர்வு தேவையில்லை. மாணவர்களைத் தரவரிசைப்படுத்தி ஒப்பீடு செய்யாமல், எல்லா மாணவர்களும் சிறந்து விளங்க ஊக்கப்படுத்த வேண்டும்.

**உயர்கல்வி தொடர்பாக மாநிலக் கல்விக் கொள்கை அளித்துள்ள பரிந்துரைகள்:**

- 11 மற்றும் 12–ம் வகுப்பு மதிப்பெண்களை வைத்தே உயர்கல்வி நிலையங்களில் மாணவர்களைச் சேர்க்க வேண்டும். எவ்வித நுழைவுத் தேர்வுகளும் கூடாது.
- கல்லூரிகளில் இளங்கலைப் படிப்புகளில் 3 ஆண்டு, முதுகலைப் படிப்புகளில் 2 ஆண்டு என்ற நிலையே தொடரும். ஆனால், யுசிஜியின் பாடத்திட்ட விதிகள் சிக்கலானவையாக இருப்பதால், மாணவர்கள் விரும்பினால் நான்கு ஆண்டு ஹானர்ஸ் படிப்பையும் தேர்வு செய்து படிக்கலாம்.
- ஒரு படிப்பில் எப்போது வேண்டுமானாலும் சேர்ந்து, எப்போது வேண்டுமானாலும் விலகும் முறை பல்கலைக்கழகப் படிப்பிற்கே எதிரானது என்பதால் அதை நடைமுறைப்படுத்தக்கூடாது. பல்கலைக்கழகப் பட்டத்தைப் பெற 3 ஆண்டுப் படிப்பை முடிக்க வேண்டும். பாதியில் விட்டுச் சென்றுவிட்டு, டிப்ளமோ சான்றிதழ் கேட்டால் அந்தக் கோரிக்கை ஏற்கப்பட மாட்டாது.
- உயர்கல்வியில் அரசின் பங்களிப்பு குறைந்து தனியாரின் பங்களிப்பு அதிகரிக்கிறது. இது எல்லாப் பிரிவினரும் குறிப்பாகச் சமூகத்தின் கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் உயர்கல்வி பெறும் வாய்ப்பைக் குறைக்கும். உயர் கல்வியில் அரசு கூடுதலாக முதலீடு செய்ய வேண்டும்.
- தனியார் கல்வி நிலையங்கள் பாரம்பரியமான படிப்புகளுக்குப் பதிலாகச் சந்தைக்குத் தேவைப்படும் படிப்புகளை வழங்குகின்றன. இதனால், பல தருணங்களில் மாணவர்கள் சரியாகத் தயார் செய்யப்படாமல் வெளியில் அனுப்பப்படுகிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பதும் கடினமாகிறது. இதை அரசு கட்டுப்படுத்த வேண்டும்.
- பள்ளி, கல்லூரிகளுக்கு இணையாகத் தனியார் நடத்தும் கோச்சிங் வகுப்புகளைத் தடை செய்வது குறித்து அரசு பரிசீலிக்க வேண்டும். இவர்கள் கல்வியை ஒரு பொருளைப் போல விளம்பரமும் செய்கின்றனர். இது தொடர்ந்தால் பள்ளி, கல்லூரிகள் தேவையற்றுப் போய்விடும் நிலை ஏற்படலாம்.

“தமிழ்நாட்டின் தேவைகளை மனதில் வைத்து உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கை இது. தேசிய கல்விக் கொள்கை, அரசின் கல்வி நிலையங்களைப் பற்றியும் தனியார் கல்வி நிலையங்களைப் பற்றியுமே பேசியது. அரசு உதவி பெறும் கல்வி நிலையங்கள் பற்றி எதையும் சொல்லவில்லை. இந்தக் கொள்கை அது குறித்தும் பேசுகிறது. உயர்கல்வியில் நுழைவுத் தேர்வை எதிர்க்கிறது. சமமான கற்றல் வாய்ப்பை எல்லோருக்கும் தர உதவும் கல்விக்கொள்கை இது” என்கிறார்கள் கல்வியாளர்கள்.

# மெல்லக் கற்றலில் இருந்து வெற்றிக்கு...






தேவிப்பிரியா

கற்றலில் குறையுடன் ஒரு குழந்தை இருப்பதை இந்தச் சமுதாயம் சாதாரணமாக எடுத்துக்கொள்வதில்லை. பாதிக்கப்பட்ட குழந்தைக்கு முட்டாள் பட்டம் கட்டி, அவர்கள் வாழ்க்கையைச் சிதைத்துப் புதைப்பதற்கான வேலையையும் சேர்த்துச் செய்கிறது. தன் குழந்தை மெதுவாகக் கற்றுக்கொள்கிறது என்பதை ஒரு குழந்தையின் பெற்றோர் ஏற்றுக்கொள்வதே இங்கு சிரமம். மற்ற குழந்தைகளின் வேகத்தைப் பார்த்து, தன் குழந்தை மெதுவாகக் கற்கிறது என்பதைப் புரிந்துகொண்டு அதனைப் பெற்றோர்கள் எப்படிக் கையாள்வது? இதுகுறித்து விளக்கம் அளிக்கிறார் கற்றலில் சிரமப்படும் குழந்தைகளுக்கான ஹெலிக்ஸ் ஓப்பன் ஸ்கூல் தாளாளர் மற்றும் கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிறப்புப் பயிற்சியாளர் தேவிப்பிரியா.

குழந்தைகளின் கற்றல் திறன் ஒரே மாதிரி இருக்காது. பலர் வேகமாகக் கற்பார்கள். சிலர் கொஞ்சம் மெதுவாகவும் கற்கலாம். இதற்குக் காரணம் அவர்களின் கற்றல் திறன் குறைவாக இருப்பதே. குழந்தைகளின் ஐக்யூ அடிப்படையில் அவர்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

ஒரு சில குழந்தைகளின் ஐக்யூ நன்றாக இருந்தாலும் கற்றலில் தடுமாறலாம். இவர்கள் படிப்பு தொடர்பான விஷயங்களைப் பேசுவதில் ஆர்வமாக இருக்கலாம். அதையே எழுத வேண்டிய சூழல் ஏற்படும்போது எழுதுவதில் பின்தங்குகின்றனர்.

மெல்லக் கற்கும் குழந்தைகள் பெரும்பாலும் ஆசிரியர் அல்லது பெற்றோரின் கூடுதல் கவனிப்பில் படிக்கின்றனர். இந்த உதவியின்றி இவர்கள் படிப்பது கடினம். திரும்பத் திரும்பப் பயிற்சி அளித்து இவர்களைத் தேர்ச்சியடைய வைக்கின்றனர். பரம்பரைக் காரணங்கள், தாய் வயிற்றில் வளரும்போது ஏற்படும் வளர்ச்சிக் குறைபாடு, நரம்பியல் கோளாறுகள் போன்றவற்றால் மெல்லக் கற்றல் பிரச்னையைக் குழந்தைகள் சந்திக்கின்றன.


உங்கள் குழந்தையின் ஐக்யூ லெவல் 90 முதல் 110 வரை இருப்பது சராசரி. 80 முதல் 89 வரை இருப்பது சராசரிக்கும் கீழ். 70 முதல் 79 வரை உள்ளவர்கள் அதற்கும் கீழ் மூளை வளர்ச்சி கொண்டவர்களாக வகைப்படுத்தப்படுகின்றனர். ஐக்யூ 69க்கும் கீழ் உள்ளவர்கள் மூளை வளர்ச்சிக் குறைபாடு

உள்ளவர்கள். மெதுவாகப் படிக்கும் குழந்தைகள் இந்த ஐக்யூ சோதனையில் நல்ல நிலையில்கூட இருக்கலாம். மெல்லக் கற்கும் மாணவர்களின் ஐக்யூ 70 முதல் 90 வரை இருக்கலாம். இவர்களின் கல்வித்திறன் அவர்களது வயதுக்கு ஏற்ற வளர்ச்சியை எட்டுவதில்லை.

மெல்லக் கற்றலை நாம் சிறப்புக் கற்பித்தல் முறையின் மூலம் சரிசெய்ய முடியும். ஆரம்ப வகுப்புகளில் மெல்லக் கற்றல் ஒரு பிரச்னையாகத் தெரிவதில்லை. குழந்தைகள் வளரும்போதுதான் இந்தப் பிரச்னை பெற்றோருக்குத் தெரியவருகிறது. இவர்கள் பள்ளியில் எதிர்பார்க்கும் அளவுக்கு அதிக மதிப்பெண்கள் எடுக்க முடிவதில்லை. அடுத்தடுத்த வகுப்புகளுக்குச் செல்லும்போது சில சமயங்களில் தேர்ச்சி பெறவே சிரமப்படுகின்றனர். மெல்லக் கற்கும் இவர்கள் மக்கு, சோம்பேறி என முத்திரை குத்தப்பட்டு மற்றவர்களால் புறக்கணிக்கப்படுகின்றனர்.

மெல்லக் கற்பவர்கள் சாதாரணக் குழந்தைகளைப் போல் திறமையானவர்களே. பல்திறன் கொண்டவர்களாக இருக்கவும் வாய்ப்புள்ளது. படிப்பில் வெற்றியடைய இவர்களுக்குக் கூடுதலான ஆதரவு தேவைப்படுகிறது. மெதுவாகக் கற்பவர்கள் ஒவ்வொன்றுக்கும் அதிக நேரம் எடுத்துக்கொள்கின்றனர். இயல்புக்கும் குறைவான கற்றல் திறன் கொண்டிருப்பதால், இவர்களிடம் கோபம் கொள்ளாமல் கூடுதல் நேரம் எடுத்து அதிக முறைகள் கற்பிக்க வேண்டியிருக்கும்.

மெதுவாகக் கற்கும் குழந்தைகளிடம் பொதுவான சில அறிகுறிகளைப் பார்க்கலாம். இந்தக் குழந்தைகளின் பேச்சில் வயதுக்கு ஏற்ற முதிர்ச்சி இருக்காது. பேசும்போது குழந்தைத்தனமான வார்த்தைகளைப் பயன்படுத்துவார்கள். புரிதல் இல்லாத கோபங்கள் ஏற்படும். சமூகத்தில் மற்றவர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதிலும் இவர்கள் பிரச்னையைச் சந்திக்கின்றனர். விரக்தியாகக் காணப்படுவது, எதற்கும் பதற்றப்படுவது, ஒரு சூழலில் கற்றுக் கொண்டவற்றை அடுத்தடுத்த சூழலுக்கு ஏற்ப மாற்றிப் பயன்படுத்துவதில் சிக்கல் ஏற்படும்.




படிப்பதே பிடிக்காது. படிக்க நேர்ந்தாலும் வேறு வேலைகளை இழுத்துப் போட்டுக்கொண்டு செய்வார்கள். குறைவான நினைவாற்றல் இருக்கும். ஒரு வேலையில் உள்ள பல படிகளைப் புரிந்துகொள்வதில் சிரமம் ஏற்படும். வார்த்தைகளைத் திரும்பத் திரும்பக் கூறுதல், சரளமாக வாய்விட்டுப் படிப்பதில் சிக்கல், ஒத்த எழுத்துகள் – வார்த்தைகள் மற்றும் குறியீடுகளைக் குழப்பிக்கொள்வது, கணித பார்முலாக்களை மனதில் வைத்துக் கணக்கிடுவதில் சிரமம் என்று இருப்பார்கள். தன்னைப் பற்றிக் குறைவாக மதிப்பிடுவது, பொது ஒழுங்கின்மை, அதி வேகத்தை வெளிப்படுத்துவது. சத்தமிடுவது போன்ற அறிகுறிகளில் சிலவற்றை இவர்களிடம் பார்க்க முடியும்.

இவர்களுக்குச் சிறப்புக் கற்றல் முறைகளைப் பின்பற்ற வேண்டும். படிப்பில் மந்தமாக உள்ள குழந்தையை மேம்படுத்த முடியும் என்ற நம்பிக்கையுடன் பெற்றோரும் ஆசிரியரும் செயல்பட வேண்டும். இவர்கள் ஒவ்வொன்றையும் காட்சிப்படுத்திக் கற்கும்போது நினைவூட்டலை எளிதாக்கலாம். எண்களைக் கற்கும்போது, கூடவே பொருட்களைக் கையில் கொடுத்துக் கற்பிக்க வேண்டும். குழுவாக மற்ற மாணவர்களுடன் இணைந்து கற்கும்போதும் கூடுதல் கவனம் அளித்து இவர்களுக்கு உதவ வேண்டும்.

‘ரெமடியல் டீச்சிங்’ உத்திகளைப் பயன்படுத்த வேண்டும். மெல்லக் கற்கும் குழந்தைக்கு எழுத்துகளைப் புரிந்துகொள்வது, வார்த்தைக் கட்டமைப்பு, வடிவங்களைப் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றில் எதில் பிரச்னை என்பதைப் புரிந்துகொண்டு திரும்பத் திரும்ப அவர்கள் கற்றுக் கொள்வதற்கான சூழலை உருவாக்க வேண்டும். பள்ளியில் ஆசிரியர்களும், பெற்றோரும் இவர்களுக்குக் கூடுதல் அன்பையும் கவனிப்பையும் கொடுக்கும்போது இந்தக் குழந்தைகள் கற்றலில் தேர்ச்சி அடைகின்றனர். இவர்களுக்குள் இருக்கும் கூடுதல் திறன்களைக் கண்டறிந்து அவற்றை மேம்படுத்தவும் உதவலாம். இவர்களது தன்னம்பிக்கையை மேம்படுத்துவதன் மூலம் வாழ்க்கையிலும் வெற்றியாளர்களாக உருவாக்க முடியும்.

– யாழ் ஸ்ரீதேவி



# அதிகமாகக் கிடைக்கும் உதவி!

'வானத்தைப் போல' திரைப்படத்தில் 'தம்பி விஜயகாந்த்' ஊறுகாய் போட்டு அதை விற்று முன்னேறுவார். இதனால் அந்த ஏரியாவின் பிரபல ஊறுகாய் கம்பெனி முதலாளி ஆனந்தராஜின் தொழில் பாதிக்கும்.

கடுப்பான ஆனந்தராஜ் உடனே தம்பி விஜயகாந்தை அழைத்து, "நீ ஊறுகாய் கம்பெனியை மூடிவிடு. நான் ஐந்து லட்சம் ரூபாய் தருகிறேன்" என்பார். தம்பி விஜயகாந்தோ, "நான் ஏன் என் தொழிலை விட வேண்டும். முடியாது" என்று மறுத்துவிடுவார். இதனால் தம்பி விஜயகாந்துக்கும் ஆனந்தராஜுக்கும் கடும் மனக்கசப்பு ஏற்பட்டுவிடும்.

சில நாட்களில் 'அண்ணன் விஜயகாந்த்' ஒரு சிக்கலில் மாட்டிக்கொள்வார். அவரைக் காப்பாற்ற தம்பி விஜயகாந்துக்கு ஐந்து லட்சம் ரூபாய் தேவைப்படும். வேறு வழியில்லாமல், எந்த ஆனந்தராஜிடம் கர்வத்துடன் தன்னம்பிக்கையாகப் பேசினாரோ, அந்த ஊறுகாய் கம்பெனி ஆனந்தராஜிடம் வந்து, "ஐயா, எனக்கு அவசரமா ஐந்து லட்சம் வேணும். நான் நீங்க சொல்றபடி என் கம்பெனியை மூடிவிடுகிறேன்" என்பார்.

ஆனந்தராஜ் அவருக்கு உடனே ஐந்து லட்சம் பணத்தைக் கொடுப்பார். கம்பெனியை மூட வேண்டாம் என்பார். தம்பி விஜயகாந்தின் ஊறுகாய்களைத் தானே மார்க்கெட்டிங் செய்து கொடுப்பதாகவும் சொல்வார்.

தம்பி விஜயகாந்தின் மீது கடும் வெறுப்பில் இருந்த ஆனந்தராஜ் திடீரென்று நேசித்து உதவி செய்த அந்த உளவியலின் பெயர் என்ன? அதை ஆங்கிலத்தில் 'Ben Franklin effect' என்று சொல்கிறார்கள்.

Ben Franklin effect என்றால் என்ன? இரண்டு மனிதர்களுக்கிடையே கசப்பும், மெலிதான வெறுப்பும் ஒவ்வாமையும் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இதில் திடீரென்று ஒருவர் கொஞ்சம் இறங்கிவந்து மற்றவரிடம் உதவி கேட்டால், இவர் வெறுமனே ஒரு உதவி மட்டும் செய்வதில்லை. மேலும் சில உதவிகளையும் சேர்த்தே செய்கிறாராம்.

‘‘எனக்கு அவரைப் பிடிக்கவே பிடிக்காது. அவருக்கும் என்னைப் பிடிக்காது. ஆனால் அவர் என்னிடம் திடீரென்று கொஞ்சம் இறங்கிவந்து உதவி கேட்பது என் ஈகோவைத் திருப்திப்படுத்துகிறது. உடனே நான் என்னை நல்லவனாக நிரூபிக்க நினைப்பேன். ‘என்னிடம் அவன் இறங்கி வந்து உதவி கேட்டதற்காக மட்டும் அவனுக்கு உதவி செய்யவில்லை. நான் பொதுவாகவே உதவி கேட்பவருக்கு நிறைய உதவிகள் செய்வேன்’ என்று நிரூபிக்க நினைப்பேன். அதன் காரணமாக ஒற்றை உதவி மட்டுமே கேட்டவருக்கு, மேலும் சில உதவிகளைச் செய்வேன்” என்பதே இந்த உளவியல்.

இதற்கு ஏன் Ben Franklin effect என்று பெயர் வந்தது? நவீன அமெரிக்காவை உருவாக்கிய அரசியல்வாதியும், விஞ்ஞானியுமான பெஞ்சமின் ப்ராங்க்ளின் தன் சுயசரிதையில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்.

“என் சக அரசியல்வாதி ஒருவரிடம் அரிதான புத்தகம் இருப்பதைக் கேள்விப்பட்டேன். எனக்கு அது தேவையாய் இருந்தது. ஆனால் எனக்கும் அவருக்கும் ஒத்துவரவே வராது. எப்போதும் விவாதம் செய்து கொண்டும், லேசான வெறுப்பைக் காட்டிக் கொண்டும் அலைவோம்.

ஆனால் அது அரிதான புத்தகமாயிற்றே. எனக்குப் படிக்க வேண்டுமே. நான் அவரிடம், ‘அந்தப் புத்தகத்தை எனக்கு வாசிக்கக் கொடுக்க முடியுமா’ என்று கேட்டேன். அவர் உடனே அப்புத்தகத்தைக் கொடுத்தது மட்டுமில்லாமல், ‘படித்துவிட்டுப் பொறுமையாகக் கொடுங்கள்’ என்று சொன்னார். அதன்பிறகு பொது இடங்களில் என்னைப் பார்க்கும்போதெல்லாம் நன்றாகப் பேசிப் பழக ஆரம்பித்தார்.

என் மீது வெறுப்பு கொண்ட அவர் புத்தகத்தைத் தருவாரா என்ற சந்தேகத்தில் இருந்த எனக்கு, அவர் புத்தகத்தையும் தந்து மேலும் என்னிடம் நன்றாக நடந்துகொண்டது ஆச்சரியமாய் இருந்தது. மனிதனின் எந்த மனநிலை இப்படி நடக்கச் சொல்கிறது என்ற கேள்வி வந்தது” என்கிறார்.

இந்த உளவியலைப் பெஞ்சமின் ப்ராங்க்ளின் முதல்முறையாகக் குறிப்பிட்ட காரணத்தால், இதற்கு Ben Franklin effect என்று பெயர் வந்தது. அன்றாட வாழ்வில் நீங்களும் எங்காவது இந்த விளைவைச் சந்தித்தால் அதை ரசியுங்கள், சிந்தியுங்கள். ‘வானத்தை போல’ ஆனந்தராஜின் அன்பு என்பது Ben Franklin effect–ன் ஒருவகை என்பதையும் புரிந்துகொள்வோம்.

**– விஜயபாஸ்கர் விஜய்**


# உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

AGARAM FOUNDATION **யாதும்** நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

**சந்தாதாரர் ஆகுங்கள்!**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | | | |
| **முகவரி** | | | |
| **தொலைபேசி** | | **அலைபேசி** | |
| **மின்னஞ்சல்** | | | |

**டிக் செய்யவும்**

☐ **ஓர் ஆண்டு ரூ.240**

☐ **இரண்டு ஆண்டுகள் ரூ.450**

காசோலை / வரைவோலை மூலம் அனுப்பலாம். KARU CREATIONS என்ற பெயரில் செக் / டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

இப்படிவத்தை நிரப்பி செக் / டி.டி.யுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்:

**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.
போன்: 99529 20801
email: contactyadhum@gmail.com



# நீட் தேர்வை நீக்குவதற்கு மூன்று காரணங்கள்!

எம்.பி.பி.எஸ் உள்ளிட்ட இளநிலை மருத்துவச் சேர்க்கைக்காக நடைபெற்ற நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற கூக்குரல் இந்தியா முழுக்க எழுந்திருக்கிறது. இதுதொடர்பாக உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு போடப்பட்டிருக்கிறது. இந்த வழக்கில் மத்திய அரசு, தேர்வை ரத்து செய்ய மறுக்கிறது.

இந்தத் தேர்வே மோசடியானது என்பதற்கு மூன்று காரணங்களைச் சொல்லலாம். முதல் காரணம்... இந்த ஆண்டு நீட் தேர்வில் 67 பேர் 720–க்கு 720 மதிப்பெண்கள் பெற்றிருக்கிறார்கள். ஆனால், கடந்த 2021–ம் ஆண்டில் வெறும் மூன்று பேர் மட்டுமே இப்படி முழு மதிப்பெண்ணான 720 வாங்கினார்கள். 2022–ம் ஆண்டில் யாருமே 720 மார்க் வாங்கவில்லை. கடந்த ஆண்டு இரண்டு பேர் மட்டுமே 720 பெற்றார்கள். இந்த ஆண்டு எப்படி 67 பேர் முதலிடம் பிடித்தனர்? இந்தக் கேள்விக்கு நீட் தேர்வை நடத்திய தேசியத் தேர்வு முகமை அமைப்பு பதில் சொல்லவில்லை.

முழு மதிப்பெண் பெற்றவர்கள் எண்ணிக்கை அதிகரித்தது போலவே, அதிக மதிப்பெண் பெற்றவர்கள் எண்ணிக்கையும் மிக அதிகமாக இந்த முறை இருந்தது. குறிப்பாக நீட் தேர்வில் 700 மதிப்பெண்களுக்கு மேல் கடந்த ஆண்டு பெற்றவர்கள் 294 பேர். இந்த ஆண்டு 1,770 பேர் 700 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றிருந்தார்கள். கடந்த 2023–ம் ஆண்டில் 6,803 பேர் 650 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றிருந்தார்கள். இந்த ஆண்டோ 21,724 பேர் இப்படி 650 மதிப்பெண்களைத் தாண்டியிருந்தார்கள். கடந்த ஆண்டு 28,629 பேர் 600 மதிப்பெண்களுக்கு மேல் வாங்கியிருந்தார்கள். இந்த ஆண்டோ 80,468 பேர் 600 மதிப்பெண்களைத் தாண்டியிருந்தார்கள்.

இது அரசு மருத்துவக் கல்லூரிகளில் சேர்வதற்கான கட் ஆஃப் மதிப்பெணைத் தாறுமாறாக உயர்த்தியிருக்கிறது. குறைந்த கட்டணத்தில் அரசுக் கல்லூரிகளில் மருத்துவம் படிக்க முடியும் என்று நம்பிய பலரது கனவுகளைப் பறித்திருக்கிறது. "நீட் கேள்வித்தாள் வெளியாகி மோசடியில் ஈடுபடும் எல்லோருமே முழு மதிப்பெண் எடுக்க வேண்டும் என்று ஆர்வம் காட்ட மாட்டார்கள். அது பலரது கவனத்தையும் சந்தேகத்தையும் தங்கள் பக்கம் திருப்பும் என்பது அவர்களுக்குத் தெரியும். 650 மதிப்பெண்களுக்கு மேல் எடுத்தாலே போதும், சிறந்த மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கும். அதனால் சின்னச்சின்னத் தவறுகளை வேண்டுமென்றே செய்து சில மதிப்பெண்கள் குறைவாகவே வாங்குவார்கள். நீட் கேள்வித்தாள் கசிந்ததற்கும், இத்தனை பேர் அதிக மதிப்பெண்கள் எடுத்ததற்கும் நேரடித் தொடர்பு உண்டு" என்கிறார்கள் கல்வியாளர்கள்.

'எங்கோ ஒன்றிரண்டு இடங்களில் கேள்வித்தாள் கசிந்துவிட்டது என்பதற்காக நீட் தேர்வையே ரத்து செய்துவிட்டு மீண்டும் ஏன் நடத்த வேண்டும்?' என்பது மத்திய அரசின் கேள்வி. ஆனால், பீகாரில் கேள்வித்தாள் கசிந்த வழக்கில் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்னும் நிறைய பேரை சி.பி.ஐ தேடுகிறது. பீகார், குஜராத், ராஜஸ்தான், ஹரியானா, உத்தரப்பிரதேசம், ஜார்க்கண்ட் மற்றும் சத்தீஸ்கர் என்று ஏழு மாநிலங்களில் நீள்கிறது இந்த விவகாரம். இந்த மாநிலங்களில்தான் ஒவ்வோர் ஆண்டும் நிறைய பேர் அதிக மதிப்பெண் எடுக்கிறார்கள். அதன் பின்னணி விசாரிக்கப்பட வேண்டும்.

இரண்டாவது காரணம்... நீட் தேர்வை நடத்தும் தேசியத் தேர்வு முகமையின் தலைவரை இப்போது மாற்றிவிட்டார்கள். அந்த அமைப்பில் நிரந்தரப் பணியாளர்கள் என்று 25 பேர் மட்டுமே இருக்கிறார்கள். ஐ.ஐ.டி மற்றும் எய்ம்ஸ் போன்ற கல்வி நிறுவனங்களின் நிபுணர்கள் உதவியுடன்தான் தேர்வுகளை நடத்துகிறார்கள். சுமார் 23 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பொறுப்பை இந்த 25 பேர் கொண்ட குழுவிடம்தான் ஒப்படைப்பதா என்ற கேள்வி எழுகிறது.

குஜராத்தின் கோத்ராவில் இருக்கும் குறிப்பிட்ட ஒரு பள்ளியில் வெளி மாநிலங்களிலிருந்து பல மாணவர்கள் வந்து தேர்வு எழுதியிருக்கிறார்கள். அவர்கள் நல்ல மதிப்பெண் பெற்றிருக்கிறார்கள். நீட் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள், தாங்கள் தேர்வு எழுத இருக்கும் மாநிலம் மற்றும் நகரத்தை மட்டுமே தேர்வு செய்ய முடியும். எங்கோ ராஜஸ்தானில் இருந்து குஜராத்தின் கோத்ராவில் தேர்வு மையம் வேண்டும் என்று ஒருவர் விண்ணப்பம் செய்வது ஏன்? அப்படி விண்ணப்பிக்கும் ஒருவருக்கு மிகக் கச்சிதமாக இந்தப் பள்ளியே தேர்வு மையமாக அமைவது எப்படி? தேசியத் தேர்வு முகமையில் பணிபுரியும் ஒருவருடைய உதவி இல்லாமல் இது நடப்பது சாத்தியமில்லை.

மூன்றாவது காரணம்... இந்த ஆண்டு நீட் தேர்வு எழுதிய 1,563 மாணவர்களுக்குக் கருணை மதிப்பெண் வழங்கப்பட்டது. நீதிமன்றம் கேள்வி எழுப்பிய பிறகு இந்தக் கருணை மதிப்பெண்களை ரத்து செய்துவிட்டு அவர்களுக்கு மறுதேர்வு வைத்தது தேசியத் தேர்வு முகமை. இவர்களில் ஒவ்வொரு மாணவருக்கும் 70 முதல் 80 வரை கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்டன. கருணை மதிப்பெண் பெற்றதாலேயே 6 மாணவர்கள் 720 எடுத்து முதலிடம் பிடித்தனர்.



ஒருங்கிணைந்த சட்ட நுழைவுத் தேர்வு தொடர்பாக கடந்த 2018–ம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் கருணை மதிப்பெண்கள் வழங்கியதாகச் சொன்னார்கள். அது ஆன்லைன் தேர்வு. தேர்வின்போது தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது, மின்சாரம் தடைப்பட்டது. ஆனால், தேர்வு நேரம் முடிந்ததும் தேர்வு எழுத முடியாமல் போனது. அதனால் நிறைய பேருக்கு முழுமையான நேரம் கிடைக்கவில்லை எனக் கருணை மதிப்பெண் கொடுக்கச் சொன்னது கோர்ட்.

நீட் என்பது வினாத்தாளைப் பார்த்து பேப்பரில் விடை தரும் தேர்வு. இதையும் அதுபோலக் கருதியது சரியில்லை. மேலும், ஒரே மையத்தில் நேரக்குறைபாடு காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களில், புகார் செய்தவர்களுக்கு மட்டுமே கருணை மதிப்பெண் தந்தார்கள். மற்றவர்களுக்குத் தரவில்லை. சிலருக்குச் சாதகமாக அந்தத் தேர்வு அமைப்பு நடந்திருக்கிறது.

மாணவர்களுக்கு நீதி கிடைக்க, இந்தத் தேர்வை இல்லாமல் செய்ய வேண்டும். ●




# மூட்டுவலி... எப்படித் தவிர்க்கலாம்!



நமது உடலில் அதிகம் பாதிப்புக்கு ஆளாகும் உறுப்பு, கால் மூட்டுகள்தான்! உடலின் முழு எடையையும் தாங்குவதால் அது சீக்கிரமே சீரற்றுப் போய், தாங்க முடியாத வலியை ஏற்படுத்துகிறது. முதுமையை நெருங்குபவர்கள் மட்டுமின்றி, எல்லா வயதுகளில் இருப்பவர்களும் மூட்டுவலியால் அவதிப்படுகிறார்கள். முதியவர்களுக்கு மற்றவர்களைவிடக் கொஞ்சம் அதிகமாக இந்தப் பிரச்னை இருக்கும். நீண்டநாள் உழைப்பும் தேய்மானமும் சிலரை நிரந்தர மூட்டுவலி நோயாளி ஆக்கிவிடும். சிலருக்குக் காயத்தாலோ, தவறான உடற்பயிற்சியாலோ திடீரென மூட்டுவலி ஏற்படக்கூடும். என்ன காரணத்தால் மூட்டுவலி ஏற்படுகிறது என்பதைப் பொறுத்து வலியும் சிகிச்சையும் வித்தியாசப்படும்.

## பொதுவான உண்மைகள்:

- பெரும்பாலான மூட்டுப் பிரச்னைகளுக்கு முதுமையும் உடல் பருமனுமே முக்கியக் காரணம்.
- உலக அளவில் விளையாட்டுத் துறையில் இருப்பவர்களில் ஐம்பது சதவிகிதத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு மூட்டுவலி ஏற்படுகிறது. கடினமான பயிற்சி பெறுவதே இதற்குக் காரணம்.
- பிறவியிலேயே இருக்கும் உடல் கோளாறுகளும் மூட்டுவலிக்குக் காரணமாகலாம். ஒரு காலைவிட இன்னொரு கால் நீளம் குறைவாக இருப்பது, பாதங்கள் தட்டையாக இருப்பது, மூட்டு இணைப்பு தவறான முறையில் பிணைந்திருப்பது போன்றவை இப்படியான பிறவிக் கோளாறுகள்!
- நீண்ட காலம் உடலுக்கு வேலை தராமல் இருந்தாலும், மூட்டுவலி ஏற்படும்.
- எல்லா மூட்டுவலியும் சீரியஸான பிரச்னை அல்ல.

## ஏன் வலிக்கிறது?

- ‘ஆர்த்ரைடிஸ்’ எனப்படும் முதுமையால் தாக்கும் நோயே, கால் மூட்டு வலிப்பதற்கு முக்கியக் காரணம். இதிலும் பல வகைகள் உள்ளன. ‘ஆஸ்டியோ ஆர்த்ரைடிஸ்’ எனப்படும் பிரச்னை வரும்போது, மூட்டு இணைப்புகள் தேய்மானம்



அடைந்து வலி ஏற்படும். 'ருமடாய்டு ஆர்த்ரைடிஸ்' தாக்கும்போது உடலின் எல்லா மூட்டுகளிலும் வலி ஏற்படும். மூட்டுகளில் ஏதாவது நோய்த்தொற்று ஏற்பட்டு, அதனால் வீக்கம், வலி, மூட்டுகள் சிவப்பது என ஏற்படுவது 'செப்டிக் ஆர்த்ரைடிஸ்' எனப்படுகிறது.

- தொடை எலும்பையும் கால் எலும்பையும், கால் மூட்டில் இருக்கும் நான்கு தசைநார் தொகுப்புகளே இணைக்கின்றன. இவற்றில் ஏதாவது ஒன்றில் காயமோ, பாதிப்போ ஏற்பட்டால் மூட்டுவலி தாக்கும். குறிப்பாக விளையாட்டு மைதானங்களில் இந்தக் காயம் அதிகம் ஏற்படும். ஓடிக்கொண்டே இருக்கும்போது சடாரெனத் திசை திரும்புவதால் இப்படி தசைநார் பாதிக்கப்படும்.
- மூட்டு இணைப்புகளில் இருக்கும் திரவங்கள்தான் நமது மூட்டு அசைவைச் சுகமாக்குகின்றன. இந்தத் திரவம் நிரம்பியிருக்கும் பகுதியில் ஏதாவது வீக்கம் ஏற்பட்டாலும் மூட்டு வலிக்கும்.
- எக்குத்தப்பாக நடக்கும்போது மூட்டின் மேலுறை நகர்ந்தால்கூட மூட்டுவலி ஏற்படும்.
- இடுப்பிலிருந்து பாதமூட்டுவரை செல்லும் தசைநார் தொகுப்பில் எங்காவது பிசகியிருந்தாலோ, காயம் ஆகியிருந்தாலோகூட மூட்டுவலி ஏற்படும்.
- இடுப்பிலோ, பாதத்திலோ வேறு ஏதாவது காரணத்தால் வலி ஏற்படும்போது பொதுவாகப் பலரும் தங்கள் நடையை மாற்றிக்கொள்வார்கள். அப்படி நடையை மாற்றிக்கொள்ளும்போது முதலில் பாதிக்கப்பட்டு வலியை வெளிப்படுத்துவது மூட்டுதான்!
- படிக்கட்டில் அவசரமாக ஏறும்போது நம்மை அறியாமல் வைக்கும் தவறான அடிகள், கால் மூட்டின் மேலுறைக்கு அதிக சுமை தரும். அடுத்தடுத்து படிக்கட்டில் ஏறும்போது, இது இன்னும் பாதிக்கப்பட்டு வலியை வெளிப்படுத்தும்.
- மூட்டில் ஏற்படும் சுளுக்கு அல்லது தசைப்பிடிப்பு, எலும்புகளில் வரும் கட்டிகள், அதீத உடல் பருமன் போன்றவையும் காரணமாகலாம்.
- மூட்டின் உட்புறத்தில் ஏதாவது காயம் ஏற்பட்டு ரத்தம் கசிவது.
- தசைகள் தமது நெகிழ்வுத்தன்மையை இழப்பது.


**வலியைத் தடுக்கவும் தவிர்க்கவும்...**

- வழக்கமான வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு கால்களுக்குப் போதுமான ஓய்வு கொடுங்கள்.
- வலியை அதிகமாக்கும் அளவுக்கு நடக்காதீர்கள்; ஓடாதீர்கள்; படிகளில் ஏறாதீர்கள்.
- ஐஸ் கட்டியை ஒரு துணியில் சுற்றி, வலிக்கும் இடத்தில் ஒரு நாளைக்கு மூன்று முறை ஒத்தடம் கொடுங்கள்.
- அதிக உடல் எடையோடு இருந்தால், உடனடியாக எடை குறைக்கும் முயற்சியில் ஈடுபடுங்கள்.
- நீண்ட நேரம் நிற்காதீர்கள். நிற்க நேர்ந்தால், இரண்டு கால்களுக்கும் சமமாக எடையைப் பரப்புங்கள்.
- நிபுணர்களின் வழிகாட்டுதலோடு மட்டும் உடற்பயிற்சி செய்யுங்கள். உங்கள் உடலுக்குப் பொருந்தாத எதையும், நீங்களாகவே முயற்சித்துச் செய்யாதீர்கள்.
- ஓடுவதைவிட சைக்கிள் ஓட்டுவதும், நீச்சலும் மூட்டுகளுக்குக் குறைந்த அழுத்தத்தைத் தந்து பாதுகாக்கும்.
- சமமான, மிருதுவான தரையில் ஓடுங்கள். குஷன் வசதி கொண்ட ஷூக்களை அணியுங்கள்.
- மூட்டுகளுக்கு அடியிலோ, இடையிலோ ஒரு தலையணை வைத்துக்கொண்டு தூங்குங்கள்.

**எப்போது டாக்டரிடம் போக வேண்டும்?**

- முட்டியை மடக்கவோ, நீட்டவோ முடியாதபோது
- உங்கள் உடல் எடையைத் தாங்கி நிற்கமுடியாத அளவு வலிக்கும்போது
- மூட்டில் வலியோடு வீக்கம், சிவந்திருப்பது என அறிகுறிகளோடு ஜுரமும் சேரும்போது
- மூட்டு அசைக்கவே முடியாதபடி அப்படியே ஒரு குறிப்பிட்ட நிலையில் நின்றுவிடும்போது
- மூட்டுவலி அதன் கீழே இருக்கும் கெண்டைக்கால் பகுதிக்கும் பரவி, அங்கும் வீக்கமும் தொடர் வலியும் இருக்கும்போது ●

தினம்
தினம் ஒரு புது தாவர உணவை நீங்கள் சுவைக்க நினைத்தால்கூட, 80 ஆயிரம் நாட்களுக்கு புதிய உணவை நீங்கள் சாப்பிட முடியும். ஆம், நாம் உண்ணத்தகுந்த தாவரங்கள் இந்த உலகில் சுமார் 80 ஆயிரம் உள்ளன.




அமேசான் போன்ற உலகின் அடர்த்தியான மழைக்காடுகளில் இருக்கும் தாவரங்களில், வெறும் ஒரு சதவிகித தாவரங்களின் மருத்துவக் குணங்கள் மட்டுமே இதுவரை அறியப்பட்டுள்ளன. முறையாக ஆய்வு செய்தால், பல ஆபத்தான நோய்களுக்கு இவை மருந்தாக இருக்கலாம்.

அரிசி, கோது
சோளம்... உணவி
மனித இனத்து
கிடைக்கும் கலோ
60 சதவிகிதத்தை
தருகின்றன. இப்ப
மூன்று தாவரங்க
இனம் சார்ந்திருப்ப
என உணவியல்
எச்சரித்த




உலகின் 90 சதவிகித மக்கள், வெறும் 30 வகைத் தாவரங்களைத் தவிர சாப்பிட வேறு எதையும் பயன்படுத்துவதில்லை. தேடித் தேடி இயற்கை உணவு சாப்பிடுகிறவர்கள்கூட, 150 தாவரங்களுக்கு மேல் தாண்டுவதில்லை.


சுமா
தாவரங்
குண
வெறும்
மட்டுமின்றி
பயன்
அலோ
தாவர
சேர்க்



குடியிருப்புகளுக்காகவும் வேறு காரணங்களுக்காகவும் காடுகள் அழிக்கப்படுவதாலும், பருவநிலை மாற்றங்களாலும் தாவரங்கள் மிக வேகமாக அழிகின்றன. ஒரு விலங்கு தனது வாழ்விடத்தை இழந்தால் வேறு இடத்துக்குப் போக முடியும். வேரூன்றி நிற்கும் தாவரம் எப்போதும் காடுகளோடு சேர்ந்து அழியும்.

பூச்சிகள் தாக்கும்போது மரங்கள் 'ஃபீனாலிக்ஸ்' என்ற வேதிப்பொருளைத் தங்கள் இலைகளின் வழியே வெளியிடுகின்றன. இதனால் இலைகள் மோசமாகக் கசப்பதால், பூச்சிகளின் பெருக்கம் தடுக்கப்படுகிறது.






ுமை,
ின் மூலம்
துக்குக்
ரியில் சுமார்
இவையே
படி மூன்றே
ளை மனித
பது ஆபத்து
அறிஞர்கள்
னர்.

உலகில் இப்போது
எஞ்சியிருக்கும்
காடுகளில், வெறும்
10 சதவிகிதப் பரப்பு
மட்டுமே முறையாகப்
பாதுகாக்கப்படுகிறது.

ரஷ்யாவின்
செர்னோபில்
பகுதியில் அணு உலை
விபத்து ஏற்பட்டதால், மனிதர்கள்
அங்கு வசிக்கவில்லை. அங்கு
சோயாபீன்ஸ் செடிகளைப்
பயிரிட்டுப் பார்த்தனர்.
இவற்றில் விளைந்த சோயாவில்
வித்தியாசமான சில புரோட்டீன்கள்
இருந்தன. கதிர்வீச்சு
அபாயத்திலிருந்து பாதுகாக்கும்
புரோட்டீன் இது.



உலகில்
ர் 70 ஆயிரம்
ங்கள் மருத்துவக்
கொண்டவை.
மூலிகை மருந்தாக
, நவீன மருந்தாகவும்
படுகின்றன. பல
பதி மருந்துகளில்
மூலப்பொருட்கள்
கப்படுகின்றன.

நீங்கள்
எந்த நாட்டில்
ஒரு செடியையோ,
கொடியையோ, மரத்தையோ
பார்த்தாலும், அது அந்த நாட்டில்
மட்டுமே வளரும் தனித்துவமான
இனமாக இருப்பதற்கு 50%
வாய்ப்பு உள்ளது. ‘மொத்தமாக
மொட்டையடித்தாலும் வேறு
எங்காவது வளர்ந்திருக்கும்’ என
எந்த இனத்தையும் நினைக்க
முடியாது.


இந்தப் பூமியின்
நிலப்பரப்பில் 8 ஆயிரம்
ஆண்டுகளுக்கு முன்பு காடுகள்
மட்டுமே இருந்தன. இவற்றில்
80% காடுகளை மனித இனம்
அழித்துவிட்டது. இதில்
எத்தனை தாவர இனங்கள்
ஒட்டுமொத்தமாக அழிந்தன
எனக் கணக்கிட முடியாது.




மரங்கள் நன்கு
வளர்வது மற்ற வன
உயிரினங்களுக்கு நல்லது.
உதாரணமாக ஒரு ஓக் மரம்
நன்கு வளர்ந்தால், அது
284 வகை பூச்சிகளுக்கும்,
324 வகை நத்தை போன்ற
சிறு உயிரிகளுக்கும்
இடமளிக்கிறது.

மக்காச்சோளம்
காடுகளில்
வளர்வதில்லை.
விவசாயிகள் இவற்றைப்
பயிரிடுவதை நிறுத்தினால்,
சில ஆண்டுகளில்
மக்காச்சோளம் காணாமல்
போய்விடும்.





# கணிதப் பாடவேளையை விளையாட்டுக்களமாக மாற்றுவோம்!

கணித வகுப்பறைகளில் ஒரு பக்க உரையாடலே நிகழ்கின்றது. கணித வகுப்புகள் சலிப்பாக இருப்பதற்கு அதுவே காரணம் என்பது பெரிய குற்றச்சாட்டாகச் சொல்லப்படுகிறது. ஆசிரியர் போதனை மட்டும் நிகழ்கிறது, மாணவர்களின் பங்களிப்பும் ஈடுபாடும் உரையாடலும் நிகழ்வதில்லை. காலம்காலமாகக் கணித வகுப்புகள் அப்படித்தானே இருக்கின்றன! இப்போது சிறுசிறு மாறுதல்கள் நடைபெற்று வருகின்றன. பல புதிய கற்பித்தல் முறைகள் களத்திற்கு வருகின்றன. எல்லாப் பரிசோதனைகளும் வெற்றி அடைவதில்லை.ஏனெனில் குழந்தைகளின் தன்மைகளும், ஒவ்வொரு நிலப்பரப்பிலும் நிலவும் சிக்கலும் வேறானவை. ஒரே தீர்வு எல்லா இடங்களுக்கும் பொருந்திவிடாது.

வருங்காலங்களில் கணிதமே எல்லாத் துறைகளின் தேவையானதாக இருக்கப்போகின்றது. தொழில்நுட்பம் வளர வளர, கணிதத்தின் நுட்பங்களைத் தெரிந்தவர்கள் இன்னும் இன்னும் தேவைப்படுகின்றனர். ஆனால் உலகம் முழுக்கவே கற்பிக்கும் முறைகளிலும் கற்பிக்கப்படும் கருப்பொருளிலும் நிறைய மாறுதல்கள் தேவை.

21–ம்நூற்றாண்டின்மாணவர்களுக்கான திறன்களாகப் பட்டியலிடப்படும் திறன்களை எட்டுவதற்கு ஏகப்பட்ட மாறுதல்கள் தேவை. விமர்சனச் சிந்தனை, படைப்பாற்றல், தொழில்நுட்பக் கல்வி அறிவு மற்றும் கூட்டாகப் பிரச்னைகளைத் தீர்ப்பது போன்ற திறன்களை அவர்கள் கணிதப் பாடங்களின் மூலம் பெற வேண்டும். இவையே 21–ம் நூற்றாண்டில் தேவைப்படும் முக்கியமான திறன்கள். எனவே, கணித வகுப்பறையில் அதற்கான பரிசோதனை முயற்சிகள் தேவை. நிச்சயமாக எங்கோ ஒரு மூலையில் அமர்ந்துகொண்டு அவற்றை யோசிக்கவோ செயல்படுத்தவோ முடியாது. அதனை வகுப்பறைகளில்தான் செய்ய இயலும். வகுப்பறைகளே ஆய்வகங்கள், பரிசோதனை நிலையங்கள். அங்கே பொக்கிஷங்கள் கிடைக்கும். ஒவ்வொரு புதிய முறை கற்பித்தலும் வைரங்களையே வெளிக்கொணர்ந்துள்ளன. விளையாட்டாக்கல் என்பது சமீபமாக உருவெடுத்துவரும் ஒரு முறை.

## விளையாட்டாக்கல் (Gamification) என்பது என்ன?

விளையாட்டு முறை கற்பித்தல் என்பது நமக்குப் புதிதல்ல. ஆனால் சமீபமாக விளையாட்டாக்கல் (Gamification) என்பது பல துறைகளிலும் வேகமாகப் பரவி வருகிறது. விளையாட்டு முறை கற்பித்தலும், விளையாட்டாக்கலும் ஒன்றுபோலத் தோன்றினாலும் வேறு வேறானவை. இரண்டிலும் ஏராளமான சாதகங்கள் உள்ளன. விளையாட்டு முறை கற்பித்தலில் என்ன செய்வோம்? ஏற்கனவே ஒரு விளையாட்டு இருக்கும், அதை விளையாடும்போது என்னென்ன பாடங்கள் கற்கலாம் என விளக்குவோம். பாடத்திட்டத்தில் சொல்லித்தர வேண்டியவற்றிற்கு இது உதவும். மேலும் விளையாட்டாக இதைச் செய்வதால் ஆர்வமும் கூடும். இந்த முறை கடந்த பத்து ஆண்டுகளாகத் தன்னைத் தானே வடிவமைத்தபடி வருகிறது. வகுப்பறைகள் மட்டுமின்றி

வியாபாரம், கார்ப்பரேட் நிறுவனங்களில் பயிற்சிகள் எனப் பல இடங்களில் இதைப் பயன்படுத்துகின்றனர்.

## இதை வடிவமைப்பது எப்படி?

விளையாட்டாக்கலில் முதலில் என்னென்ன கற்றல் அடைவுகளை மாணவர்கள் பெற வேண்டும் என நிர்ணயிக்க வேண்டும். அவற்றை இலக்குகளாகவும் மைல்கற்களாகவும் மாற்ற வேண்டும். இலக்குகளை அடைபவர்களுக்கும், ஒவ்வொரு மைல்கல்லாகக் கடப்பவர்களுக்கும் புள்ளிகளை வழங்க வேண்டும். (புள்ளிகளை வாரி வழங்கலாம்). சிறப்புப் பட்டைகளையும், அவற்றுக்கான பெயர்களையும் வடிவமைக்கலாம்.

உதாரணத்திற்கு வடிவங்கள் பற்றிச் சொல்லித்தர விழைகின்றோம் என வைத்துக்கொள்வோம். கூர்கள், முனைகள், பக்கங்கள், பரப்பளவு, கொள்ளளவு என அதற்குள் போய்க்கொண்டே இருக்கலாம். ஒவ்வொரு கருத்தையும் புரிந்துகொண்ட பின்னர் அதற்கு ஏற்பப் புள்ளிகளைவழங்கலாம். அனைவரும்பார்க்கும்படியான ஓர் அட்டையில் அனைவரின் பெயரையும் எழுதி அவர்கள் புள்ளிகளைக் குறிப்பிடலாம். கை தூக்கிப் பதில் சொன்னால் புள்ளிகள், பதிலைக் கண்டுபிடிக்க முயன்றால் புள்ளிகள், விவாதித்தால் புள்ளிகள் என்று மாணவர்களின் செயல்கள் அனைத்திற்கும்



புள்ளிகள் வழங்கி உற்சாகப்படுத்த வேண்டும். இவை அனைத்தும் கற்று முடித்த பின்னர் அல்ல, கற்கும்போது நிகழும்.

## மதிப்பிடுவது எப்படி?

சரி, மாணவர்கள் கற்றுக்கொண்டார்களா, இல்லையா என எப்படி மதிப்பிடுவது? இது ஆசிரியருக்கு ஒரு சவால். ஒவ்வொரு மாணவரும் விவாதங்களின்போதும், உரையாடல்களிலும், தாள்களில் குறிப்புகள் எடுக்கும்போதும் எப்படி வெளிப்படுத்துகிறார்களோ அதற்கு ஏற்ப மதிப்பிடுவது அவசியம். வகுப்பறையில் ஆசிரியர் மிகுந்த கவனத்தோடு செயல்பட வேண்டும். இதில் ஆசிரியரின் பங்கு மிக முக்கியமானது. எந்தப் பாடத்தை எப்படி விளையாட்டாக மாற்றுவது என்பது பெரும் சவால். ஏற்கனவே இருக்கும் பாரம்பரிய விளையாட்டுகளைப் பயன்படுத்தியே, அடிப்படைக் கற்றலை வெளிச்சமிட்டுக் காட்டலாம். மெல்ல மெல்லக் கடினமான தலைப்புகளை விளையாட்டாக்க முயற்சி செய்யலாம்.

## எந்த நிலைகளில் இதனைச் செயல்படுத்தலாம்?


இதை எல்லா வகுப்புகளிலும் எல்லா நிலைகளிலும் செயல்படுத்தலாம். வயதிற்கு ஏற்றவாறு ஆட்டத்தை மாற்ற வேண்டும், விளையாட்டின் போக்கினை மாற்ற வேண்டும். இலக்குகள், புள்ளிகள் மாறும். வாரக்கணக்கில் மாதக்கணக்கில் நடக்கும் பெரும் போட்டியாக மாற்றலாம். ஒரு பருவத்திற்கான பாடங்கள் அனைத்தையும் விளையாட்டாக்கலாம். இது குழந்தைகளை உற்சாகப்படுத்தவும், கவனத்தைப் பாடத்திற்குள் செலுத்தவும், அதே சமயம் சுயமாகச் சிந்திக்க வைக்கவும் உதவும்.

## சுயசிந்தனை அதிகரிக்கிறது!

‘விளையாட்டாக்கலால் மாணவர்கள் எந்த அளவிற்கு வடிவியலை ஆழமாகக் கற்கிறார்கள்’ என்று நடைபெற்ற ஓர் ஆய்வின் முடிவு இந்த ஜூன் மாதம் வெளியானது. ஒரு வகுப்பில் இருக்கும் மாணவர்களை இரு பிரிவுகளாகப் பிரித்தனர். ஒரு பிரிவிற்கு வழக்கமான கற்பித்தல் முறையில் பாடங்கள் பயிற்றுவிக்கப்பட்டன. மற்றொரு பிரிவிற்கு விளையாட்டாக்கல் முறையில் சொல்லித் தரப்பட்டது. இவர்களுக்கு விளையாட்டு வழியாகவும், பரிசுகள், புள்ளிகள், சவால்கள், கலந்துரையாடல்கள் எனப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஓர் இலக்கும், என்னென்ன கற்றிருக்கவேண்டும் என்ற படிநிலைகளும் உருவாக்கப்பட்டிருந்தது. இதில், நிர்ணயிக்கப்பட்ட கற்றல் இலக்குகள் தவிர தனியாகவும் கூட்டாகவும் பணிபுரிய மாணவர்கள் கற்றிருந்தனர் என்பது தெரிந்தது. கூடுதலாகச் சுயசிந்தனையும், தர்க்கப்பூர்வமாக யோசிக்கும் திறனும் அதிகரித்து இருந்ததைக் கவனித்துள்ளனர்.

விளையாட்டாக்கலை நடைமுறைப்படுத்துவது சவாலான காரியமே. இதற்குப் பள்ளி, சக ஆசிரியர்கள், பெற்றோர்கள் என எல்லோரையும் திருப்திப்படுத்த வேண்டும். சவாலைக் கடந்து இதை நடைமுறைப்படுத்த வேண்டும். குட்டி குட்டியாக விளையாட்டாக்கல்களைக் கணிதம் மட்டுமல்லாமல் இதரப் பாடங்களிலும் உருவாக்கலாம். கணிதத்தில் அதற்கான தேவை நிறைய உள்ளது. முயன்றுதான் பார்ப்போமே! ●

# விளைவுகளை அறிந்து செயல்படுகிறோமா?



நிகிலா கல்லூரி படிக்கிறாள். அவள் வீட்டில் ரொம்பக் கட்டுப்பாடு. கல்லூரி முடிந்தால் வீடு, வீடு விட்டால் கல்லூரி என்றுதான் இருக்க வேண்டும். மற்றபடி பொழுதுபோக்காக எங்கும் போகக் கூடாது. அப்பாவும் அம்மாவும் ரொம்பக் கறார்.

நிகிலாவுக்கு ஒரு நாள் ஷாப்பிங் மாலுக்குத் தோழிகளோடு போகவேண்டும் என்று ரொம்ப ஆசை. அம்மா கொடுக்கும் பணத்தில் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து ஏழு மாதங்களில் 700 ரூபாய் சேர்த்து விடுகிறாள். பிறகு வீட்டில் அனுமதி கேட்கிறாள். ஆனால், ''போகக்கூடாது'' என்று கண்டிப்புடன் சொல்கிறார்கள்.

அவள் தினமும் கெஞ்சுகிறாள். "தோழிகளுடன்தான் போகிறேன்" என்கிறாள். ஒரு மாதக் கெஞ்சலுக்குப் பிறகு அப்பா மனமிரங்கி அனுமதி கொடுக்கிறார். அடுத்த ஞாயிற்றுக்கிழமை போக வேண்டும். அந்த வாரம் முழுக்கவே அவள் உற்சாகத்தில் மிதந்தாள். சனிக்கிழமை இரவு அவளுக்கு மகிழ்ச்சியில் தூக்கமே வரவில்லை.

மறுநாள் காலை நன்கு உடுத்திக்கொண்டு தயாராகிறாள். மகளுக்குச் செலவுக்காக அம்மா 500 ரூபாய் கொடுக்கிறார். ஏற்கனவே அவளிடம் 700 ரூபாய் இருக்கிறது. இப்போது 500 ரூபாய் சேர்ந்து ரூ.1,200 ஆகிவிடுகிறது. அவளுக்கு இன்னும் மகிழ்ச்சி.

"அம்மா போய்ட்டு வரேன்" என்று ஆசையாகத் துள்ளிக் குதித்துப் போகிறாள். ஒரு நிமிட நடையில் பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில் போகும்போது ஒரு 25 வயது இளைஞன் மிக வேகமாக பைக்கை ஓட்டிக்கொண்டு வந்தான். சிக்னல் போட்டதும் அதைக் கட்டுப்படுத்தி நிறுத்த முடியாமல், சாலையோரம் நின்ற நிகிலா மேல் மோதி விடுகிறான்.

பலத்த அடிபட்ட நிகிலாவை மருத்துவமனையில் சேர்க்கிறார்கள். இரண்டு வாரம் சிகிச்சை பெற்று அவள் உயிர் பிழைத்து வீட்டுக்கு வருகிறாள். இப்போது அவள் மனது எப்படி இருக்கும்? அதற்குக் காரணம் யார்?

இன்னொரு சம்பவம்... கவினும் மித்ரனும் நண்பர்கள். ஒரு நாள் வகுப்பில் மித்ரன் உட்காரப் போகும்போது கவின் விளையாட்டாக அவனுடைய சேரை பின்னால் நகர்த்துகிறான். சேர் இருப்பதாக நினைத்து உட்காரப்போன கவின், அப்படியே பின்னால் சாய்ந்து விழுகிறான்.

முதுகில் பலத்த அடி. அப்படியே மயங்கி விட்டான். மருத்துவமனைக்குக் கூட்டிப் போனால், முதுகில் அடிபட்டு நரம்பு பாதிக்கப்பட்டதாகச் சொல்கிறார் டாக்டர். நீண்ட நாட்கள் மருத்துவமனையில் இருந்த கவின், அதன்பின் அந்த ஆண்டு பள்ளிக்கு வரவில்லை. கவின் கடைசியில் பள்ளியைவிட்டே

நின்றுவிட்டான் என்று தெரிந்தபோது, ‘ச்சே, நான் அந்த சேரை எடுத்துத் தப்பு பண்ணிட்டேனே’ என மித்ரன் அழுகிறான்.

இந்த இரண்டு சம்பவங்களிலும் பாருங்கள்.... முதல் சம்பவத்தில் பைக்கை வேகமாக ஓட்டி வந்த இளைஞனும் சரி, சேரை விளையாட்டுக்கு இழுத்த கவினும் சரி, தனிப்பட்ட முறையில் கெட்டவர்கள் எல்லாம் இல்லை. ரொம்ப நல்லவர்கள்தான். ஆனால், அவர்களுக்கு consequences பற்றிய அறிவு சுத்தமாக இல்லை.

consequences என்றால், விளைவு. நாம் ஒரு செயலைச் செய்கிறோம். அதற்கு ஒரு விளைவு ஏற்படுமே, அதுதான் consequences. நான் பைக்கை ரோட்டில் படுவேகமாக ஓட்டிப் போகிறேன். அதன் விளைவு என்ன? ஒருவர் உட்காரும்போது சேரை இழுக்கிறேன். அதன் விளைவு என்ன? இப்படி ஒரு நொடி அந்த இருவரும் நினைத்திருந்தால், அந்தத் தப்பைச் செய்திருக்க மாட்டார்கள்.

Consequences என்பதில் இரண்டு உண்டு. ஒன்று, தனிப்பட்ட முறையில் இருக்கிற consequences பற்றிய அறிவு. இரண்டாவது, சமூகத்தில் பழகும்போது இருக்கிற consequences பற்றிய அறிவு. ஒருவர் தேர்வுக்குப் படிக்காமல் சோம்பேறியாக இருக்கிறார். அதனால் மதிப்பெண் குறைவது என்பது, தனிப்பட்ட முறையில் ஏற்படும் விளைவு. கூட்டமான சாலையில் கிரிக்கெட் விளையாடி, அந்தப் பந்து பலரைத் தாக்கி காயம் ஏற்படுவது என்பது சமூகத்தில் பழகும்போது ஏற்படும் விளைவு.



இரண்டுமே மோசமானவைதான். ஆனால், குறிப்பாக இரண்டாவது விளைவு குறித்துக் கூடுதல் கவனம் வேண்டும். ஏனெனில், நம் செயல்கள் பலவற்றால் அடுத்தவர்கள் வாழ்வில் பாதிப்பு ஏற்படும். குழந்தைகளுக்கு ஏதேதோ கற்றுத் தருகிறோம். இந்த consequences பற்றியும் பிள்ளைகளிடம் பெற்றோர்கள் பேச வேண்டும். பிள்ளைகளைத் தேவையற்ற சிக்கல்களிலிருந்து மீட்கும் வழி இது.

சமீபத்தில் புனே நகரில் ஆடம்பரமான போர்ஷே கார் ஓட்டிவந்து ஓர் இளைஞன் செய்த விபத்து பற்றிச் செய்திகளைப் படித்திருப்பீர்கள். பப்பில் நன்றாகக் குடித்துவிட்டு காரை ஓட்டிய அந்த 17 வயது இளைஞன், தாறுமாறான வேகத்தில் இரண்டு பேரை இடித்துவிட்டார். அவர்கள் இருவரும் உயிரிழந்துவிட்டார்கள்.

அந்த இளைஞர் குடிபோதையில் இல்லை என்று கோர்ட்டுக்கு நிரூபிக்க, அவனது ரத்த மாதிரிகளை மருத்துவமனை லேபில் மாற்றித் தில்லுமுல்லு செய்திருக்கிறது அவனது குடும்பம். இவை எல்லாம் வெளிப்பட்டு, அவன் அம்மா, அப்பா இருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இரண்டு உயிர்கள் போயிருக்கின்றன. அவர்கள் வீட்டில் உள்ளவர்கள் அடையும் மனக்கஷ்டம்... அம்மா அப்பாவுக்கு பையன் இப்படிச் செய்துவிட்டானே என்ற கவலை... ரிப்போர்ட்டை மாற்றி போலீஸில் பிடிபட்ட அவமானம், குற்ற உணர்ச்சி... இப்படி எவ்வளவு மோசமான விஷயங்கள் நடந்துவிட்டன!

இந்தக் குற்றத்தைச் செய்தவன் வயது 17. ஒருவேளை 12 வயதில் அவன் பெற்றோர்கள் அவனுக்கு consequences பற்றிச் சொல்லியிருந்தால் இது நடக்காமலே போயிருக்கலாம். இரண்டு அப்பாவிகளின் உயிர் போயிருக்காது!

சிறுவயதில் consequences பற்றிச் சொல்லிக் கொடுத்தால், எல்லோரையும் மதிக்கும் பக்குவம் கிடைக்கும். அப்போது இது மாதிரி மோசமாக வாகனங்களை ஓட்டத் தோன்றாது.

பேசுங்கள்... டீன் ஏஜர்களிடம் நிறையப் பேசுங்கள். இந்தக் கருத்தை இப்படிச் சொன்னால் பிள்ளைகள் ஏற்பார்கள். அவள்/அவன் யோசிப்பார் என்று உங்களுக்கே ஒரு வழி தோன்றும்போது, பக்குவமாக அதைச் சொல்லி விடுங்கள். இது அவர்களுக்கு நீங்கள் செய்யும் நன்மையாகும்.

**– விஜயபாஸ்கர் விஜய்**




உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக அறியப்படுகிற இந்தியாவின் உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கு ஜனநாயகம் பற்றிய அடிப்படைகளை அறியும் வாய்ப்பு இருக்கிறதா, அவர்களுக்கு அந்தப் பண்பு ஓர் உணர்வாக ஊட்டப்படுகிறதா என்பது மிகப்பெரிய கேள்விக்குறி. பல்வேறு காரணங்களைச் சுட்டிக்காட்டி, இன்றைக்கு உயர்கல்வி நிறுவன மாணவர் பேரவைகள் முழுவதுமாகவே முடக்கப்பட்டிருக்கின்றன. இதனால் மாணவர்கள் தங்களுக்குரிய அடிப்படை உரிமைகளைக்கூட ஜனநாயக முறையில் கேட்டுப் பெற முடியாத நிலை முன்பைவிட அதிகரித்திருக்கிறது.

இன்றைய மாணவர்கள் தங்கள் திறமைகளையும், தொடர்புகளையும், வெற்றி வாய்ப்புகளையும் மட்டுமே வளர்த்துக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். இந்தச் சூழலை உருவாக்கி, அதற்கான தகுதிகளையும் இந்திய மற்றும் பன்னாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களே நிர்ணயிக்கின்றன. பெற்றோர்களும் அதற்கேற்றவாறு மாற்றப்பட்டு விட்டனர். சொந்த இலக்கைப் பற்றி மட்டுமே சிந்திக்க வைக்கும் இப்படியான நிலை அதிகரித்துவிட்டது. சமூக ஊடகத்தின் தாக்கத்தால் உருவான பரந்து விரிந்த உலகப் பார்வை அவர்களுக்குப் புலப்படுவதில்லை. கடிவாளம் கட்டிய குதிரையாகப் பாயும் நிலையிலேயே இன்றைய மாணவத் தலைமுறை உள்ளது.




கல்வியமைப்பில் நுகர்வோர்களாகவும் பயனாளிகளாகவும் பங்குதாரர்களாகவும் விளங்குவோர் மாணவர்கள். மாணவர் நலன் சார்ந்த கொள்கை உருவாக்கத்திலும் முடிவுகள் எடுப்பதிலும் அவர்களின் சொந்தப் பங்களிப்பும் இருக்க வேண்டும். அப்போது மட்டுமே அசலான சிக்கல்களுக்கு உகந்த முடிவுகள் எட்டப்படும்.

தமிழ்நாடு அரசு கடந்த ஆண்டு ஒரு கோணத்தில் அரசுப் பள்ளிகளின் தரத்தை மேம்படுத்த அனைத்து அரசுப் பள்ளிகளிலும் மாணவர் பேரவை அமைப்பை உருவாக்கத் திட்டமிட்டது. இதில், 'பேரவைக்கான தலைவர் உட்பட முக்கியப் பிரதிநிதிகளைத் தேர்வுசெய்யப் பள்ளி வளாகத்திலேயே தேர்தல் நடத்தப்படும்' என்றும், 'அந்தப் பள்ளியில் பயிலும் குழந்தைகள் வாக்கெடுப்பு மூலம் அவர்களைத் தேர்வு செய்வர்' என்றும், 'இந்தப் பேரவை மூலம் குழந்தைகளின் தேவைகளையும், கருத்துகளையும் அறியமுடியும்' என்றும் தெரிவிக்கப்பட்டது.

பள்ளிப் பருவத்திலேயே ஜனநாயகத்தின் சில அம்சங்களைக் கற்றுக்கொள்ளத் தொடங்கும் மாணவர்கள், தாங்கள் விரும்பும் கல்லூரிகளுக்குச் சென்ற பின்பு தங்கள் உரிமைகளைக் கோருவதற்கு மாணவர் பேரவை அமைக்க மிகச் சில கல்லூரிகள் மட்டுமே அனுமதிக்கின்றன. பெரும்பாலான கல்லூரிகளில் இது தடை செய்யப்பட்டுவிட்டது.

கல்லூரிகளில் மாணவர் பேரவைத் தேர்தல் நடத்தினால் மாணவர்களுக்குள் தேர்தல் பிரச்னைகள் வருகின்றன என்கிறார்கள். அப்படியானால், "ஜே.என்.யூ, ஹைதராபாத் பல்கலைக்கழகம் உள்ளிட்ட சில மத்தியப் பல்கலைக்கழகங்கள், லயோலா கல்லூரி போன்ற தனியார் கல்லூரிகள் இந்தத் தேர்தலை எப்படிப் பிரச்னையின்றி நடத்துகின்றன? சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களிலும் முறைகேடுகள், வன்முறைகள் நடைபெறுகின்றன. அதற்காகத் தேர்தலையே தடைசெய்து விட்டார்களா?" என்பது போன்ற கேள்விகளும் எழுகின்றன.

உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர் பேரவை உருவானால் அவர்களின் கோரிக்கைகளை வலியுறுத்திக் கல்லூரி நிர்வாகத்தைக் கேள்வி கேட்கத் தொடங்கிவிடுவார்கள் என்ற அச்சம் அதிகார வர்க்கத்துக்கு இருக்கிறது. மாணவர்களுக்கு அரசியல் புரிதலை ஏற்படுத்தினால் அவர்கள் ஆளும் அரசுகளைக் கேள்வி கேட்கத் தொடங்கிவிடுவார்கள் என்கிற பயமான பார்வையும் இருக்கிறது. இவையே மாணவர் பேரவைத் தேர்தல் தடைக்கான உண்மையான காரணங்களாக உள்ளன. மாணவப் பருவத்தில் கல்வியோடு தொடர்புடைய சமூகம், அரசியல், பொருளாதாரம் குறித்த புரிதலை ஏற்படுத்தும் பேரவைத் தேர்தலைத் தடைசெய்வது என்பது ஜனநாயக உரிமைப் பறிப்பாகவே அமையும்.

2005ல் தேசிய அளவில் மாணவர் பேரவைத் தேர்தல்கள் ஒரு பிரச்னையாக உருவெடுத்தது. உச்ச நீதிமன்றத்தின் ஆணையின் பேரில் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்தது. முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு.லிங்டோ தலைமையிலான இக்குழு நாடெங்கும் கருத்தறிதல் கூட்டங்கள் நடத்தி, 2006 மே மாதம் தனது அறிக்கையை அளித்தது. அதில், 'மாணவர் பேரவைகள் அமைக்கப்பட வேண்டும்' என வலியுறுத்தி, அதற்குப் பல நெறிமுறைகளை வகுத்தளித்தது.



இந்தக்குழுவின்பரிந்துரைப்படி 2006ம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் 'நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்கள், அரசுக்கல்லூரிகள், அரசு உதவிபெறும் கல்லூரிகள், தனியார் கல்லூரிகள் என அனைத்திலும் மாணவர் பேரவைத் தேர்தல் நடத்த வேண்டும்' என ஆணையிட்டது. ஆனால் ஜே.என்.யூ, ஹைதராபாத் பல்கலைக்கழகம் உள்ளிட்ட சில மத்தியப் பல்கலைக்கழகங்களைத் தவிர்த்து ஏனைய மாநில, மத்தியப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் தேர்தல்கள் நடத்தப்படுவதே இல்லை. அதிலும் தமிழ்நாட்டில் மாணவர் பேரவைத் தேர்தல் நடப்பது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அதே நேரம் இமாசலப் பிரதேசம், ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களில் சில கல்லூரி, பல்கலைகளில் தொடர்ச்சியாக மாணவப் பேரவைத் தேர்தல் நடத்தப்படுவதைப் பார்க்க முடிகிறது.

1998ல் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் மாணவ – மாணவியர், ஆசிரியர், அலுவலர், நிர்வாகம், பெற்றோர், பொதுமக்கள், நுகர்வோர் அமைப்புகள் கூடி விவாதித்து, பேரவைத் தேர்தல்களுக்கும் செயல்பாடுகளுக்கும் நெறிமுறைகள் உருவாக்கப்பட்டன. அவற்றுள் முக்கியமான சிலவற்றைக் குறிப்பிட்டு அன்றைக்குத் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் வே.வசந்தி தேவி அவர்கள் தன்னுடைய 'கல்வி ஓர் அரசியல்' என்ற நூலில் விரிவாக எழுதியுள்ளார்.

மாணவர் பேரவைத் தேர்தல்களில் பங்கேற்கும் மாணவர்கள், அரசியல் கட்சிகளை முன்னிறுத்தியோ அல்லது அதன் பிரதிநிதியாகவோ இருக்கக்கூடாது. அப்படி இருப்பது மாணவர் நலனுக்கு எந்த வகையிலும் உதவாது. மாறாக, மாணவர்களுக்கே உரிய தன்னாட்சித் தன்மையுள்ள கல்வி வளாக எல்லைக்குட்பட்டு அமையும் அதிகாரத்தைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகும் கட்சி அரசியல் மீது ஈடுபாடு உள்ளவர்கள் அதைத் தொடரலாம். ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத்தைப் போன்று, பாராளுமன்றம், சட்டமன்றம், உள்ளாட்சி என்கிற மூன்றடுக்குத் தேர்தல் ஜனநாயக முறையில் நான்காவது அடுக்காக மாணவர் பேரவைத் தேர்தல்களையும் உறுதிசெய்ய வேண்டும். பிறகு அதிலுள்ள பிரச்னைகளைக் களைய முற்படலாம். ஆனால், தவறான முன்னுதாரணங்களைக் காட்டி மாணவர் பேரவைத் தேர்தல்களைத் தடைசெய்வது, உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவுக்கு அழகல்ல. ●

# அரசுப்பள்ளிகளில் குறையும் மாணவர்கள்!



கடந்த ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள 10 ஆயிரத்து 877 அரசு ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 30–க்கும் குறைவான மாணவர்களே படித்து வந்துள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவலைப் பள்ளிக்கல்வித்துறை வெளியிட்டுள்ளது. 2023–24ம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளின் நிலை குறித்த விவரங்களை ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்ட இயக்குநரகம் பல்வேறு தேவைகளுக்காக வெளியிட்டுள்ளது.

இதன்படி, தமிழகத்தில் 10,861 தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 30 மாணவர்கள் வரை மட்டுமே படித்து வருகின்றனர். மாணவர்கள் எண்ணிக்கை குறைவான இந்தப் பள்ளிகளில் 546 திருப்பூர் மாவட்டத்திலும், 509 ஈரோடு மாவட்டத்திலும், 496 திண்டுக்கல் மாவட்டத்திலும், 475 ராமநாதபுரம் மாவட்டத்திலும், 468 திருவண்ணாமலை மாவட்டத்திலும் உள்ளன. இவை டாப் 5 மாவட்டங்கள்.

அதேபோல, 30 முதல் 100 மாணவர்கள் வரை படிக்கும் பள்ளிகளின் எண்ணிக்கை 12,937. அதற்கும் மேலே 101 முதல் 250 மாணவர்கள் வரை படிக்கும் பள்ளிகளின் எண்ணிக்கை 6,262. தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 251 முதல் ஆயிரம் மாணவர்கள் வரை உள்ள பள்ளிகளின்

# கலை அறிவியலுக்குக் கூடுதல் இடங்கள்!




தமிழ்நாட்டில் கலை மற்றும் அறிவியல் படிப்புகளில் சேர்வதற்கு மாணவர்கள் கூடுதல் ஆர்வம் காட்டிவருவதால், கல்லூரிகளில் சேர்க்கை இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாகத் தமிழக அரசின் உயர்கல்வித் துறைச் செயலாளர் ஜெ.குமரகுருபரன் அரசாணை வெளியிட்டுள்ளார்.

‘சட்டப்பேரவையில் உயர்கல்வித் துறைக்கான மானியக் கோரிக்கையின்போது, 2024–25ம் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கை அதிகரிக்கப்படும் என உயர்கல்வித் துறை அமைச்சர் அறிவித்தார். அதன்படி அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தேவையுள்ள கலை, அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு 20 சதவிகிதம் கூடுதலாக மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். அரசு உதவி பெறும் கல்லூரிகளில் அரசு உதவி பெறும் பாடப்பிரிவுகளில் 15 சதவிகிதம் கூடுதலாக மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். அங்குள்ள சுயநிதிப் பாடப்பிரிவுகளில் 10 சதவிகிதம் கூடுதலாக மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் அனைத்துப் பாடப்பிரிவுகளுக்கும் 10 சதவிகிதம் மாணவர் சேர்க்கை அதிகரிக்கப்படும்.

இந்தக் கூடுதல் மாணவர் சேர்க்கையினால் கூடுதல் பணியிடங்கள் கோரக்கூடாது. கூடுதல் மாணவர் சேர்க்கைக்குச் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தின் ஒப்புதல் பெறவேண்டும். கூடுதல் சேர்க்கை இந்தக் கல்வியாண்டுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுகிறது’ என்று அரசாணையில் கூறப்பட்டுள்ளது.



எண்ணிக்கை 1,145. ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் படிக்கும் பள்ளிகள் வெறும் 12 மட்டும்தான். இவற்றில் சென்னை மாவட்டத்தில் 7 பள்ளிகளும், திருப்பூர், தூத்துக்குடி, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு பள்ளியும் உள்ளன.

பள்ளிக்கல்வித்துறையின் கீழ் செயல்படும் 6,254 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், 30 மாணவர்கள் வரை மட்டுமே படிக்கும் பள்ளிகளின் எண்ணிக்கை 16. நீலகிரி மாவட்டத்தில் 5 பள்ளிகளும், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் தலா 2 பள்ளிகளும், சென்னை, பெரம்பலூர், ராமநாதபுரம், சிவகங்கை, திருச்சிராப்பள்ளி, திருப்பூர், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு பள்ளியும் இப்படிச் செயல்பட்டு வருகின்றன.

அதேபோல, 30 முதல் 100 மாணவர்கள் வரை படிக்கும் பள்ளிகள் எண்ணிக்கை 536 எனவும், 101 முதல் 250 மாணவர்கள் வரை படிக்கும் பள்ளிகள் எண்ணிக்கை 2,183 எனவும், 251 முதல் 1000 மாணவர்கள் வரை படிக்கும் பள்ளிகள் 3,047 எனவும் உள்ளன. 472 பள்ளிகள் மட்டுமே 1000 மாணவர்களுக்கு மேல் படிக்கும் பள்ளிகளாக இயங்கி வருகின்றன.

“அரசுப்பள்ளிகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லாததால், தனியார் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பதையே பெற்றோர்கள் விரும்புகின்றனர்” என்று கல்வியாளர்கள் தெரிவிக்கின்றனர். ஓராசிரியர், ஈராசிரியர் பள்ளிகள் அதிகளவில் செயல்பட்டு வருகின்றன. பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் மூலம் 14 ஆயிரம் தற்காலிக ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். இப்படித்தான் அரசுப்பள்ளிகள் இயங்கி வருகின்றன.

இந்தக் கல்வியாண்டில் அரசுப்பள்ளிகளில் மூன்றரை லட்சம் மாணவர்கள் புதிதாகச் சேர்ந்துள்ளனர். அவர்களின் கல்விநலனில் அரசு அக்கறை காட்ட வேண்டும்.

## உடற்கல்வி ஆசிரியர்கள் உபரியா?



தமிழ்நாட்டை விளையாட்டுத் துறையில் முன்னணிக்குக் கொண்டுவர மாநில அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதேநேரத்தில் பள்ளிகளிலோ உடற்கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதைக் கல்வியாளர்கள் விமர்சனம் செய்துள்ளனர்.

‘அரசுப்பள்ளிகளில் உபரியாக உள்ள உடற்கல்வி ஆசிரியர்களைக் கண்டறிந்து, அவர்களை மற்ற பள்ளிகளுக்குப் பணி நிரவல் செய்ய வேண்டும்’ என்று பள்ளிக்கல்வித் துறை அறிவுறுத்தியுள்ளது. இதுகுறித்துப் பள்ளிக்கல்வி இயக்குநர் ச.கண்ணப்பன் அனுப்பிய சுற்றறிக்கையில், ‘தமிழகத்தில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர்கள் மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்படுகின்றனர். அதன்படி, மாணவர்கள் எண்ணிக்கை 700–க்கும் கீழ் இருந்தால் ஒரு உடற்கல்வி ஆசிரியர், உயர்நிலைப் பள்ளிகளில் 700–க்கும் மேல் மாணவர்கள் இருந்தால் 2 உடற்கல்வி ஆசிரியர்கள், மேல்நிலைப் பள்ளிகளில் 701 முதல் 1,500 வரை மாணவர்கள் இருந்தால் ஒரு உடற்கல்வி இயக்குநர் மற்றும் ஒரு உடற்கல்வி ஆசிரியர், 1,500–க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒரு உடற்கல்வி இயக்குநர், 2 உடற்கல்வி ஆசிரியர்கள் என்றவாறு பணியிடங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கையைக் கணக்கிட்டு, உபரியாக உள்ள ஆசிரியர்களைப் பணிநிரவல் கலந்தாய்வு மூலம் தேவையுள்ள பள்ளிகளுக்கு மாறுதல் செய்ய வேண்டும்’ என்று கூறியுள்ளார்.




இதன்படி, ஏற்கனவே பணியில் உள்ளவர்களை மாறுதல் செய்து காலியிடங்களை நிரப்புவார்கள். புதிய ஆசிரியர்கள் நியமனம் இனி இல்லாமல் போய்விடும் என்ற கவலை ஏற்படுகிறது. ●

ஒரு பெண் ரயிலில் பயணம் செய்கிறார். கருப்பு ஆடை அணிந்திருக்கும் அப்பெண் சமீபத்தில் யாரையோ இழந்து துக்கத்தில் இருக்கிறார் என்பதை நம்மால் உணர முடிகிறது. அவரது கண்களில் கசியும் மெலிதான கண்ணீர், அவர் வேதனையில் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. ஆனால் அவ்வளவு துன்பத்தில் அந்தப் பெண் இருந்தாலும், அவரிடம் ஒரு ஜெண்டில்மேன் பேசிப் பேசி தொடர்ச்சியாகத் தொந்தரவு செய்துகொண்டிருக்கிறார்.

# கேள்விகளால் எரிச்சல் ஏற்படுத்தலாமா?



ஜெர்மானிய ஓவியர் Berthold Woltze வரைந்த 'The Irritating gentleman' என்ற இந்த ஓவியம் உலகப்புகழ் பெற்றது. அன்றாட வாழ்க்கையில் பல ஆண்கள் இந்த Irritating gentleman போல இருந்து வருகிறார்கள். தான் அடைய நினைக்கும் பெண்ணின் உணர்வு புரியாமல் கேள்விகள் கேட்டு அவரைப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்குவதுதான் இந்த Irritating gentleman தனத்தின் குணம் ஆகும்.

காலையில் போய், "இந்த பில் எல்லாம் என்ட்ரி போட்டுட்டீங்களா?" என்று ஓர் ஆண் கேட்கும்போது அந்தப் பெண் அதற்கு 'ஆம்' அல்லது 'இல்லை' என்று பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். ஆனால் கம்ப்யூட்டரில் அந்த டாக்குமென்டை திறந்து பார்த்தாலே, 'பில் என்ட்ரி போட்டாச்சா, இல்லையா' என்பது தெரிந்துவிடும். ஆனால் நம்மூர் Irritating gentlemanகள் அப்படித் தெரிந்துகொள்ள மாட்டார்கள்.

அந்தப் பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையே எதுமில்லை என்றால் இப்படிச் சாதாரணமாகக் கேட்பதில் தவறில்லைதான். ஆனால் அந்தப் பெண்ணை அந்த ஆண் பலமுறை பேசிப் பேசி கவர நினைக்கும்போது, பார்வையால் துளைத்து எரிச்சலூட்டும்போது, அந்தப் பெண் இந்த ஆணிடம் பேசவே விரும்பாதபோது, இப்படியான கேள்விகள் கேட்டு அவரைப் பேச வைக்கும் சூழலுக்குத் தள்ளுவது தவறான செயலாகும். அதைத்தான் ஓவியர் இங்கே சிந்திக்க வைக்கும் படமாகக் கொடுத்திருக்கிறார்.

பொது இடங்களிலும் பணி இடங்களிலும் உறவு வட்டத்திலும் பல ஆண்கள் இப்படி Irritating gentleman ஆக, தெரிந்தோ தெரியாமலோ நடந்துகொள்கிறார்கள். இது பெண்களுக்கு மிகப்பெரிய எரிச்சலையும், வேதனையையும் கொடுக்கிறது என்பதை ஆண்கள் எப்படிப் புரிந்துகொள்ளலாம்? அநு.வை.நாகராஜன் எழுதிய

‘வினையடி நான் உனக்கு’ என்ற சிறுகதை இதைத் துல்லியமாக விளக்குகிறது. 60 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட சிறுகதை இது...

செல்லி, இளம் வயதிலேயே கணவனை இழந்த பெண். அவளுக்குப் பொன்னி என்ற பத்து வயது மகளும், சின்னி என்ற நான்கு வயது மகளும், ஒன்றரை வயது மகனும் இருக்கிறார்கள்.

செல்லியின் கணவன் சின்னான் துணி வெளுக்கும் வேலையைச் செய்து வந்தான். கடுமையான உழைப்பாளியான சின்னான் உழைத்துக் கஷ்டப்பட்டுப் பணம் சேர்த்து ஒரு லாண்டரி கடை வைத்து அங்கே நாலைந்து பேருக்கு வேலை கொடுக்கும் அளவுக்கு முன்னேறி இருக்கும்போது நோய் வந்து இறக்கிறான்.

சின்னான் கடையில் வேலையாளாக இருந்த அம்பலம் அதன்பின் செல்லியின் வறுமையைப் பயன்படுத்திக் கடையை அவனே வாங்கிக்கொண்டு முதலாளி ஆகிவிடுகிறான். இப்போது செல்லி அதே கடையில் உள்ள துணிகளை வெளுத்துக் கொடுத்து, அதற்காகக் கூலி வாங்கும் வேலையாளாக மாறிப்போகிறாள். மூன்று குழந்தைகள் இருக்கும்போது செல்லிக்கு வேறு வழி தெரியவில்லை.

அம்பலம் எப்படியாவது செல்லியை அடைந்துவிட வேண்டும் என்று ஒரு Irritating gentleman ஆக, வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் அதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறான். அவன் பேச்சு புரியாதது போலவும், கண்டும் காணாமல் இருப்பது போலவும் சமாளித்தபடி, சாடை மாடையாக அவனைத் திட்டியபடி செல்லி சமாளித்துக்கொண்டிருக்கிறாள்.

ஒருநாள் காலையில் செல்லிக்குப் பசிக்கிறது. தன் மூத்தமகள் பொன்னியைஎழுப்புகிறாள். ஆனால், மூன்று குழந்தைகளும் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். செல்லி தன் மகனைத் தொட்டுப் பார்க்கிறாள். அவனுக்கு மெலிதாகக் காய்ச்சல் அடித்துக்கொண்டே இருக்கிறது. வைத்தியரிடம் சென்று மருந்து கேட்க வேண்டும் என்று நினைக்கிறாள். ஆனால், துணி வெளுக்கும் வேலை தலைக்கு மேல் இருப்பதால், அதைச் செய்ய நினைக்கிறாள்.

பொன்னியை எழுப்புகிறாள். அவள் எழாமல் இருக்கவே, ஒரு பூவரசு மரக்கிளையில் உள்ள இலைகளைப் பிய்த்து போட்டுவிட்டு பிரம்பாக்கி அடிக்க வருகிறாள். பொன்னி பயந்து எழுகிறாள்.

செல்லி இருக்கும் டீத்தூளை வைத்து டீ போடுகிறாள். இரண்டாவது மகள் சின்னி, “சீனி இல்லை, இனிப்பா இல்லை” என்று அழுகிறாள். “சீனி போட்டுச் சாப்பிடுற அளவுக்குக் காசில்லை” என்று செல்லி திட்டுகிறாள்.

பிறகு துணிமூட்டையை எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு வீட்டை விட்டுப் போகும் முன்பு, “நீயும் டீ குடி, தம்பிக்கும் ஊத்திக் கொடு. தம்பியை வைத்தியரிடம் கூட்டிப்போய் மருந்து வாங்கிக் கொடு. பிறகு பக்கத்துக் கடையில் போய் பன் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு எனக்கும் கொண்டு வா” என்று பொன்னியிடம் சொல்கிறாள்.

துணி மூட்டையோடு நடக்க நடக்கச் செல்லிக்கு அவள் கடந்த கால வாழ்க்கை நினைவுக்கு வந்தது. நன்றாக வாழ்ந்தோம். திடீரென்று வாழ்க்கையே மாறிவிட்டது. தனக்காக எல்லா வேலையையும் செய்யும் தன் மூத்த மகள் பொன்னியை நினைத்தாள் செல்லி. அவள் கண்களில் நீர் முட்டிக்கொண்டு வந்தது.

‘ச்சே, ஒரு சின்னப் பிள்ளைய வேலை வாங்குறோம். தூங்க விடாம அடிக்கிறோம். அதுவும் இந்தக் குடும்பத்துக்கு எவ்வளவு வேலை செய்யுது. நான் வேற அதை படுத்துறேனே’ என்று பொன்னியை நினைத்துச் செல்லிக்குக் கண்கலங்கியது.

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பார்க்கும்போது குளம் வந்திருந்தது. துணி மூட்டையை அவிழ்த்துத் துணி துவைக்கலானாள் செல்லி. அங்கே பெண்கள் பலர், ஊரில் ஒவ்வொரு பெண்ணைப்பற்றியும்ஒழுக்கமில்லாதவள், அவள் ஊர் மேய்பவள் என்று புறம் பேசிக் கொண்டிருந்தார்கள். ‘நம்மையும் இந்த அம்பலத்தோடு இணைத்து இப்படித்தான் பேசுவார்கள்’ என்று நினைத்துச் செல்லி வருந்தினாள்.

அப்போது அம்பலம் சரியாகச் செல்லி துணி துவைக்கும் இடத்துக்கு வந்தான். செல்லி அவனைப் பார்த்தும் பார்க்காதது மாதிரி துணி துவைத்துக் கொண்டிருந்தாள். அம்பலம் அருகில் வந்து செல்லியின் உடல் அழகை, வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தான். இதில் எரிச்சலடைந்த செல்லி, அவனை முறைக்கிறாள்.

உடனே அம்பலம், “செல்லி, மேலத்தெருக்காரர் பேத்தி பாவாடை சட்டையை வெளுத்திட்டியா? அவர் மகன் அடிக்கடி அதைக் கேட்டு வர்றான். நான் அதுக்காகத்தான் வந்தேன்” என்கிறான்.

அதாவது செல்லி பதில் சொல்லியே ஆக வேண்டிய கேள்வியை அம்பலம் கேட்கிறான். செல்வியும், “வெளுத்து தேய்ச்சி வைச்சிருக்கேன். பிறகு குடுத்து விடுறேன்” என்று சொல்லிவிட்டு மறுபடியும் துணி துவைக்கிறாள்.

அப்போது செல்லியின் மகள் பொன்னி வருகிறாள். ‘‘அம்மா, உனக்கு டீயும் பன்னும் வாங்கிட்டு வந்திருக்கிறேன்’’ என்று கூடையை



நீட்டுகிறாள். அப்போதுதான் பொன்னியும் அம்பலமும் அதைக் கவனிக்கிறார்கள். மேலத்தெருக்காரர் பேத்தியின் பாவாடை சட்டையைப் போட்டுக்கொண்டு வந்திருந்தாள் பொன்னி. வீட்டில் வெளுத்து தேய்த்து வைத்த உடையைப் பொன்னி அணிந்திருந்தாள்.

அம்பலம் அதைப் பார்த்துச் செல்லி மேலுள்ள எரிச்சலோடு, "என்ன இது? வெளுக்க வாங்கின துணியை உன் பிள்ளைக்கு உடுத்தி விட்டுருக்க. இதுதான் உன் பழக்கமா?" என்று கேலியாகக் கேட்டுச் சிரிக்கிறான்.

இதைக் கேட்டுச் செல்லி ஆவேசமாகிறாள். அவள் கோபமெல்லாம், வெளுத்த துணியை உடுத்திய தன் மகள் பொன்னி மீது திரும்பியது. "ஏண்டி இப்படிச் செய்த" என்று தன் மகளை ஓங்கிக் கன்னத்தில் அடித்தாள் செல்லி. பொன்னி அதில் தடுமாறி, குளக்கரை படிக்கட்டுகளில் உருண்டு காயம்பட்டு குளத்துக்குள் மூழ்குகிறாள்.

'தான் என்ன செய்துவிட்டோம்' என்று உணர்ந்து உறைந்து போகிறாள் செல்லி. சுதாரித்துப் போய் மகளைத் தூக்குகிறாள். அப்போது, "அம்மா, தம்பிக்குக் காய்ச்சல் அதிகமானதால வைத்தியர்கிட்ட உடனே கூட்டிட்டுப் போனேன். எனக்குப் போட வேற பாவாடை இல்லை. அவசரத்துக்குத் தெரியாம இதைப் போட்டுட்டேன்" என்று சொல்லி மூச்சுத் திணறி மயங்கிச் சரிகிறாள் பொன்னி.

"ஐயோ பொன்னி. நான் உன்ன இப்படிப் பண்ணிட்டேனே'' என்று செல்லி கதற, "இல்லை, நான்தான் இப்படிப் பண்ணிட்டேன்" என்று அம்பலம் அழுவதோடு கதை முடிகிறது.

இக்கதையை நிறைய கோணங்களில் பார்க்கலாம். ஆனால், அம்பலம் செய்யும் அந்த Irritating gentleman தனம்தான் இதன் மையக் கருத்து.

கணவனை இழந்த வருத்தமும், மூன்று பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற கவலையும் செல்லிக்கு இருக்கிறது. தன் மூத்த மகள் பொன்னியை வேலை வாங்குகிறோமே என்ற குற்ற உணர்வும் ஏற்படுகிறது. காலையில் சாப்பிடாமல் பசியில் வேலை செய்து சோர்ந்து போயிருக்கிறாள். ஊர் தன்னைத் தப்பாகப் பேசிவிடுமோ என்று பயமும் இருக்கிறது.

இத்தனை உணர்வுகள் அவளைத் துன்புறுத்திக்கொண்டிருக்கும் போது, அம்பலத்துக்கோ செல்லியின் உடல் அழகே தெரிகிறது. செல்லியின் உடலுக்குள் இருக்கும் மனதுக்கு இவ்வளவு கஷ்டங்கள் இருப்பதை அந்த Irritating gentleman புரிந்துகொள்ளவே இல்லை. அவனுக்குச் செல்லியின் உடலே பிரதானமாகப் படும்போது, செல்லியைத் தொந்தரவு செய்வதன் மூலம் ஒரு குழந்தைக்குப் பெரிய துன்பத்தைச் செய்துவிடுகிறான்.

அன்றாட வாழ்க்கையில் ஒரு Irritating gentleman ஆக இருக்கும் ஆணின் எண்ணம் என்னவாக இருக்கிறது? 'நாம என்ன செய்றோம். வேலை விஷயமாத்தானே பேசுறோம்' என்று தோன்றும். ஆனால் அவர்கள் எரிச்சலூட்டும் பெண்ணின் உடலுக்குள் செல்லியின் உடலுக்குள் இருந்தது போல ஒரு மனம் இருக்கிறது. அதில் ஆயிரம் உணர்வுகள், குழப்பங்கள், யோசனைகள் எல்லாம் இருக்கும் என்பதை உணர வேண்டும்.

படிக்குமிடத்தில், பணியிடத்தில், பழகுமிடத்தில் Irritating gentleman ஆக இல்லாமல் கண்ணியம் காத்தால், எல்லா இடங்களிலும் ஒரு நேர்மறை அதிர்வு இருப்பதை உணரலாம். அந்தச் சூழலே மிக அழகாகிவிடும்.

– விஜயபாஸ்கர் விஜய்



# மனவலிமை மந்திரங்கள்!

எந்தச் சூழலையும், எப்படிப்பட்ட நெருக்கடியையும் சில மனிதர்கள் மனவலிமையுடன் எதிர்கொள்வார்கள். அவர்களின் அந்த மனவலிமைக்கான மந்திரங்கள் என்னென்ன?

- எந்த நேரத்திலும் அவர்கள் தங்கள் ஆற்றலை விட்டுக்கொடுக்க மாட்டார்கள். தங்கள் வாழ்வில் நிகழும் பெரும்பாலான நிகழ்வுகளைத் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்கள்.
- மாற்றங்களை ஏற்றுக்கொள்வார்கள். அவற்றை நெருக்கடியாக நினைக்காமல், தாங்கள் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளாக நினைப்பார்கள்.
- எதிர்பாராதவிதமாக ஏதாவது நடந்துவிட்டால், 'நான் எதற்குமே தகுதி இல்லாதவன்' என்று தன்னை நொந்துகொள்ள மாட்டார்கள். 'எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது' என்று புலம்பவும் மாட்டார்கள். அதை மறந்து, கடந்து செல்வார்கள்.
- தங்கள் கட்டுப்பாட்டில் இல்லாத ஏதோ ஒரு விஷயத்தை நினைத்துக் கவலைப்பட மாட்டார்கள், அதைப் பற்றிய புகார்களும் அவர்களிடம் இருக்காது. எல்லாவற்றையும் கடந்து மகிழ்ச்சியாக இருப்பார்கள்.
- ஆதாயம் தேடி யாரிடமும் போலியாக நடந்துகொள்ள மாட்டார்கள். அவர்களின் உரையாடல் கனிவாகவும், நேர்மையாகவும், அச்சமின்றியும் இருக்கும்.
- ஒரு செயலால் நல்ல பலன் கிடைக்கும் என்று தெரிந்தால், அதற்காக ரிஸ்க் எடுக்கத் தயங்க மாட்டார்கள்.
- கடந்த காலத்தில் சரியாக நடக்காத எதையோ நினைத்து வருந்திக்கொண்டு இருக்க மாட்டார்கள். அவர்களின் ஆற்றலை நிகழ்கால முன்னேற்றத்துக்காக மட்டுமே செலவிடுவார்கள்.
- தங்கள் செயல்களுக்கான முழுப்பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். எதற்காகவும் அடுத்தவர்களைக் குறை சொல்லமாட்டார்கள்.
- தோல்விகளில் கலங்க மாட்டார்கள். சோர்ந்து போய்ச் செயலிழக்கவும் மாட்டார்கள். ஒவ்வொரு தோல்வியையும் தங்களை மேம்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்பாகப் பார்ப்பார்கள்.
- 'இந்த உலகமே எனக்கு எதிராக இருக்கிறது' என்று நிலைகுலையவும் மாட்டார்கள். 'எல்லோரும் எனக்கு உதவி செய்யக் கடமைப்பட்டவர்கள்' என்று எதிர்பார்க்கவும் மாட்டார்கள். தங்கள் திறமையால் ஜெயிக்கவே ஆசைப்படுவார்கள்.
- உருப்படியில்லாத சிந்தனைகளில் தங்கள் நேரத்தை வீணடிக்க மாட்டார்கள். அவர்களின் நினைப்பு முழுக்க, ஆக்கப்பூர்வமான செயல்களைப் பற்றியே இருக்கும்.
- இன்று ஒரு செயலைச் செய்துவிட்டு, அதற்கான பலன்களை உடனடியாக எதிர்பார்க்க மாட்டார்கள். ஒரு மரம் கனிகளைத் தருவதற்குப் போதுமான காலம் எடுத்துக்கொள்ளும் என்பது அவர்களுக்குத் தெரியும்.
- சூழலுக்கு ஏற்பத் தங்களை மாற்றிக்கொள்ளத் தயங்க மாட்டார்கள். எப்படிப்பட்ட நிலையிலும் தங்கள் முழுத்திறமையை வெளிப்படுத்த அவர்களால் முடியும்.
- சில இடங்களில் சில சங்கடங்கள் ஏற்படலாம். ஒரு வேலை செய்யும் இடத்தில் எதிர்பார்த்த வசதிகள் கிடைக்காமல் போகலாம். ஒரு தொழிலில் நினைத்தபடிப் பல விஷயங்கள் அமையாமல் போகலாம். இதனால் எல்லாம் எரிச்சல் அடையாமல், தங்கள் செயல்களைத் தொடர்வார்கள்.
- ஒவ்வொரு நாளிலும் தங்கள் முன்னேற்றத்தை அவர்கள் மதிப்பிடுவார்கள். அதற்கு ஏற்றபடி அடுத்த நாளைத் திட்டமிடுவார்கள்.

# தன்னார்வ ஆசிரியர்களுக்குப் பயிற்சி!

அகரம் நமது பள்ளி ஃபெல்லோஷிப் திட்டம், திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாதுமலை, ஜமுனாமரத்தூர் பகுதியில் உள்ள 32 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் உள்ள தன்னார்வ ஆசிரியர்களுக்குக் கோடை விடுமுறையில் 12 நாட்கள் பயிற்சி நடைபெற்றது. பூமி குழுவினர் Teaching & Learning Training நடத்தினார்கள். திருமிகு. யாமினி அவர்கள் குழந்தை உளவியல் பயிற்சி கொடுத்தார்கள். திருமிகு. சரஸ் பாஸ்கர் அவர்கள் Emotional Handling / Peer Pressure Handling பயிற்சி கொடுத்தார்கள். ஆசிரியர் பணியும், சமுதாயக் கடமைகளும் பற்றி காளீஸ்வரன் ஐயா அவர்கள் விளக்கினார்கள்.

அரசியல் பழகுவோம் & அரசியல் அமைப்பு பற்றி ஆழமான பயிற்சியை திரு. சமஸ் அவர்கள் வழங்கினார்கள். திரு. கே.பி.குணசேகரன் அவர்கள், Social Understanding with Politics பற்றிப் பயிற்சி அளித்தார்கள். ICDS பற்றி திருமிகு. பேச்சியம்மாள் அவர்கள் கலந்துரையாடினார். திருமிகு. கல்பனா அவர்கள் கிராமசபை பற்றி விரிவாக விளக்கினார். Reward Trust குழுவினர் Teaching Learning பற்றிக் கற்றுக் கொடுத்தார்கள். திரு. நவீன் குமார் அவர்கள் SMC App handling பற்றிக் கற்றுக் கொடுத்தார்கள். திரு. ராஜ்குமார் அவர்கள் தற்காப்புப் பயிற்சி அளித்தார். தன்னார்வ ஆசிரியர்கள், 'இந்தப் பயிற்சி பயனுள்ளதாக இருந்தது' என்று தெரிவித்தார்கள்.



# தன்னார்வலர்கள் அறிமுகம்!

அகரம் பவுண்டேஷனுடன் இணைந்து பணியாற்ற விரும்பி, ஒவ்வொரு மாதமும் நமது இணையதளத்தில் பதிவு செய்யும் தன்னார்வலர்களுக்கு முதலில் அறிமுகக் கூட்டம் நடைபெறும். அவர்களுக்கு முதல் கட்டமாக அகரம் பற்றிய அறிமுகம் கொடுக்கப்படும். பின்னர் அகரத்தில் நடக்கும் செயல்பாடுகள் அனைத்தும் விரிவாக அவர்களுக்கு விளக்கப்படும். அவர்கள் அகரத்தின் எந்தச் செயல்பாடுகளில் ஈடுபட விரும்புகிறார்களோ, அதில் அவர்கள் இணைந்து பயணிக்கத் தொடங்கலாம். இந்த மாதம் புதிதாக இணைந்தவர்களுக்கு அகரம் அறிமுகமும், mentorship பற்றிய புரிதலும் கொடுக்கப்பட்டது.



# முன் வேலைவாய்ப்பு பயிற்சி!





அகரம் விதைத் திட்டத்தில் 2022–ம் ஆண்டு தேர்வாகித் தற்போது இறுதி ஆண்டு பயின்று வரும் 84 மாணவ, மாணவியர்களுக்கு முன் வேலைவாய்ப்புக்கான ஒரு வாரப் பயிற்சி, விழுப்புரத்தில் உள்ள கல்வி கேந்திரா பயிற்சி மையத்தில் நடைபெற்றது. வாழ்வியல் பயிற்சியாளராக (Life Skill Trainer) திரு. கார்த்திக் அவர்களும், கணிதப் பயிற்சியாளராக (Aptitude Trainer) திரு. பொன்னிவளவன் அவர்களும் பயிற்சி அளித்தனர். அந்த ஏழு நாட்களில் மாணவர்கள் தங்களது கல்வித்திறன் மற்றும் வாழ்வியல் பண்புகளை மேம்படுத்துவதற்கு, பல்வேறு செயல்பாடுகள் மூலம் கற்றுக் கொண்டனர்.

இதேபோல 2022 விதை மாணவ, மாணவியர் 91 பேருக்கு முன் வேலைவாய்ப்புக்கான பயிற்சி, கொடைக்கானல் அருகே தாண்டிக்குடியில் உள்ள குட்வில் குழந்தைகள் இல்லத்தில் நடைபெற்றது. அங்கும் திரு. கார்த்திக் அவர்களும், திரு. பொன்னிவளவன் அவர்களும் பயிற்சி அளித்தனர். நம் வாழ்வில் கணிதம் எவ்வளவு முக்கியம் என்பதையும், ஒவ்வோர் இடத்திலும் அது எவ்வாறு பயன்படுகிறது என்பதையும் மாணவர்கள் அறிந்துகொண்டனர். பயிற்சியின் இறுதி நாளில் தங்கள் தடைகளையும் தயக்கத்தையும் உடைத்தெறிந்து மாணவர்கள் தன்னம்பிக்கை பெற்றனர்.






# சிறந்த அனுபவங்களைக் கொடுப்போம்!

சாலையோரம் கூடையில் பழம் வைத்து விற்றுக்கொண்டிருந்தார் ஒரு முதியவர். அவரிடம் மாம்பழம் வாங்க வந்த நடுத்தர வயதுப் பெண்மணி, விலையை விசாரித்தார். கிலோ 80 ரூபாய் விலை சொன்னதும், "என்னய்யா, தங்கம் மாதிரி விலை சொல்றே? மூணு கிலோ மொத்தமா வாங்கிக்கறேன், 200 ரூபாய்க்குக் கொடு!" என்று அடித்துப் பேரம் பேசினார். இருப்பதிலேயே பெரிய பழங்களாகத் தேடி எடுத்து எடை போட்டு வாங்கிக்கொண்டு போனார். பெரியவரும் வேறு வழியின்றிப் புலம்பிக்கொண்டே கொடுத்தார்.

பழம் வாங்கிய பெண்மணி, வெயிலும் தாகமும் தாங்காமல் ஒரு குளிரூட்டப்பட்ட உணவகத்துக்குப் போனார். ஃப்ரூட் சாலட் வேண்டும் என்று கேட்டார். பலவிதமான பழங்களைத் துண்டு போட்டு சாலட் போல ஆக்கி அலங்காரமான தட்டு ஒன்றில் வைத்துப் பரிமாறினார்கள். மொத்தமாக எடை போட்டால் கால் கிலோகூட வராது. அதைச் சாப்பிட்டு முடித்ததும் 180 ரூபாய்க்கு பில் கொடுத்தார்கள். டிப்ஸுக்கு 20 ரூபாய் சேர்த்து 200 ரூபாய் கொடுத்துவிட்டு வெளியேறினார் அவர்.

அதே முதியவரிடம் பழம் வாங்க இன்னொரு நடுத்தர வயது மனிதர் போனார். பேரமே பேசவில்லை. பழங்களைத் தேடிப் பொறுக்கவும் இல்லை. "நீங்களே நல்லதா பார்த்து எடுத்துப் போடுங்க" என்றார். முதியவரும் நல்ல பழங்களாக எடுத்துத் தந்தார். இரண்டு கிலோ வாங்கிக்கொண்டு 200 ரூபாயை அவர் கொடுத்தபோது, முதியவர் சில்லரை இல்லாமல் தடுமாறினார். "பரவாயில்லை, அதுக்கும் அரை கிலோ கொடுத்துடுங்க" என்று வாங்கினார்.

அங்கிருந்து திரும்பும்போது, "அவர்கிட்ட விலை குறைச்சுக் கேட்டிருக்கலாமே" என்று தன் மகள் கேட்டபோது அந்த மனிதர், "இதுபோன்ற ஏழைகளிடம் பேரமே பேசாமல் கேட்ட விலையைக் கொடுக்க வேண்டும். ஒருவேளை நாம் கூடுதலாகக் கொடுத்திருந்தாலும், அவர்களைத் தலைகுனிய வைக்காமல் நாம் தரும் நன்கொடை என்று நினைத்துக்கொள்ளலாம்" என்றார்.


இது இன்னொரு சம்பவம்... ரயிலில் பயணம் செய்தார் ஒரு மனிதர். எதிர்ப்புற இருக்கையில் இளம் தம்பதியர் வந்து அமர்ந்தனர். அவர்களின் ஒரு வயதுக் குழந்தை தூங்குவதற்காக அழகிய கூடை ஒன்றை எடுத்து வந்திருந்தனர். குழந்தை அந்தக் கூடையில் இருந்தபடி, எதிர் இருக்கை மனிதரைப் பார்த்தது. தன் பேத்தி வயதில் இருந்த குழந்தையைப் பார்த்துச் சிரித்தார் அவர். குழந்தை முதலில் சிரித்தது, பிறகு கூடைக்குள் ஒளிந்துகொண்டு அவருடன் கண்ணாமூச்சி ஆடியது. பிறகு எழுந்து நின்று அவரைப் பார்த்துச் சிரித்தது. அவரும் குழந்தையைக் காணாமல் திகைப்பில் இருந்தது போல முகபாவனை காட்டிவிட்டுப் பிறகு சிரித்தார்.

இந்தக் கண்ணாமூச்சி நீண்ட நேரம் தொடர்ந்தது. அந்த மனிதர் உற்சாகமாக விளையாடினார். பிறகு குழந்தை களைப்பில் தூங்கிவிட்டது. குழந்தையின் பெற்றோர் இறங்கும்போது, "எங்கள் குழந்தைக்கு இனிய அனுபவத்தைக் கொடுத்ததற்கு நன்றி" என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

எளிய மனிதர்களுக்கும், அறிமுகம் இல்லாதவர்களுக்கும்கூடச் சிறந்த அனுபவங்களைக் கொடுங்கள்.



Owned, Published by T.J. GNANAVEL, 10/55, Raju Street, West Mambalam, Chennai - 600 033 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


திருக்குறள் 100
வள்ளுவர் வழியில் வாழ்ந்தவர்கள் வரலாற்றுடன் குறள்
சிவகுமார்

Yadhum Monthly - Registered with the Registrar of Newspapers for India under No. TNTAM/2016/69050.
Postal Registration No. TN/CC(S)DN/612/22-24.
WPP License No - TN/PMG(CCR)/WPP 665/2022-2024 Date of Publication First week of every month.
Posted at Egmore RMS (Patrika Channel) Posted on 5th to 11th of every month



**மழை தரும் நீர்க்கொடையே**
**மண்ணுக்கும் உரம்; மனிதனுக்கும் வரம்.**
**வான்தரும் நீரைப் புறக்கணித்து**
**மண்ணுக்குள் தோண்ட வேண்டாம்.**
**மழைநீரை மதிப்போடு சேமிப்போம்;**
**மழை பொழியவும் காரணமாவோம்!**



மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ ©
காட்டன்

- வேஷ்டிகள்
- சர்ட்டுகள்
- பனியன்கள்

Shop online @ www.ramrajcotton.in
கம்பெனி ஷோரூம் மற்றும் முன்னணி ஜவுளி நிறுவனங்களில் கிடைக்கும்
**Follow us** RamrajCottonofficial ramrajcotton ramrajcottonmedia

If undelivered
please return to
**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.
போன்: 99529 20801